# ஆட்சிமன்றத்தில் செனட்டை ஒழிக்க மசோதா!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THF EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 243
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 26 ஷஃபான் 10 திங்கட்கிழமை (12-10-70)

எங்கே?

தீபாவளி பண்டிகையைக் குதூகலத்துடன் கொண்டாட வாருங்கள்! பாருங்கள்!! நிதானியுங்கள்!!!

உயர்ந்தரக சிறந்த சாறிகளையும் புதுரக றெடிமேட் சேட் - சூட் கவுன் - பிளவ்ஸ் வகைகளையும் திருப்தியுடன் வாங்கி மகிழ

கணேசானந்தாஸ்

(முட்டாசுக்கடை சந்தி)

208, கே.கே எஸ்.றேப், யாழ்ப்பாணம்.

தீபாவளி விற்பனை!

சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருக்கும் தேவையான

புடவை வகைகள்

ஏராளமான டிசைன்கள் எமது கையிருப்பிலுண்டு. உங்கள் தீபாவளி தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முந்துங்கள்.

ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்

66, கே.கே.எஸ்.றேப், -யாழ்ப்பாணம்

## கொல்வின் சமர்ப்பித்தார்

— மு. சின்னத்துரை —

கொழும்பு, ஞாயிறு செனட்சபையை ஒழிப்பதற்கான மசோதாவை அரசியல் திட்ட அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டிசில்வா இன்று ஆட்சி மன்றத்தில் சமர்ப்பித்தார்.

இன்று பிற்பகல் ஆட்சி மன்றம் கூடியபோது, டாக்டர் கொல்வின் இச்சட்ட மூலத்தைச் சமர்ப்பித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஆறு நியமன எம். பிக்கள் ஸ்தானத்தை 8 நியமன எம். பி.க்களாக உயர்த்துவதென்றும் இம் மசோதாவில் குறிப்பிட்டுள்ளது.

டாக்டர் கொல்வின் இம் மசோதாவை பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் சமர்ப்பித்தார்.

இலங்கை சுதந்திர அரசுக் கட்சிகளுக்கு ஏற்ப இம் மசோதா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று ஆட்சிமன்றத்தில் மற்றும் நான்கு முக்கிய மசோதாக்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன.

## யந்திரவியல் கூட்டுத்தாபனத்தில்

# 13,000 தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப் படுவர்?

## மந்திரிசபை உபகுழுவிடம் பீட்டர்கெனமன் சிபார்சு

கோட்டை, ஞாயிறு அரசாங்க எந்திரவியல் கூட்டுஸ்தாபனத்திலுள்ள 13000 தற்காலிக சமயா சமய ஊழியர்களுக்கு நிரந்தர உத்தியோகம் வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேற்படி 13000 ஊழியருக்கும் நிரந்தர உத்தியோகம் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் மந்திரிசபையின் உபகுழுவிடம் சமர்ப்பித்துள்ளார். இக்குழு நிரந்தர மற்ற ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்குவது குறித்து ஆராய்கிறது.

கடந்த பொதுத் தேர்தலின்முன் 4000 ஊருயர்ரான் தற்காலிக ஊழியர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தற்காலிக நியமனங்களால் நிரந்தர உத்தியோகம் வழங்குதலில் சிக்கல் ஏற்படுவதாகவும் இதைத் தடுக்கவே இவர்களின் சேவைகள் நிரந்தரமாக்கப்பட விருப்பதாகவும் வீடமைப்பு அமைச்சர் பீற்றர் கெனமன் தெரிவித்துள்ளார்.

### பத்தாயிரம் பேருக்கு வேலை வழங்க திட்டம்

கோட்டை, ஞாயிறு ... படும். சுமார் 10,000 ஜி. சி. ஈ. [illegible] தரா[illegible]முள்ள வாலிபர்களு[illegible] இத்திட்டத்தை விஸ்தரித்து நாளடைவில் மேலும் பலருக்கு [illegible]

## 'மக்கள் இல்லாமல் புரட்சி செய்ய முடியாது'

உடுப்பிட்டி, ஞாயிறு 'மக்கள் இல்லாமல் புரட்சி செய்ய முடியாது. மக்களிடையே தெளிவுபிறக்க வேண்டும். வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார, வர்த்தகத்தைக் கூட்டுறவு முறையில் அமைக்கவேண்டுமென்பதுதான் எமது இலட்சியமாகும். இலங்கையிலிருந்து 35,000 அன்ஞசிப்பழ டின்களை சோவியத் யூனியன் வாங்கியுள்ளது. இது போன்று தக்காளி, மாங்காய்களையும் டின்களிலடைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பலாம். மரக்கறிக் கூட்டுத்தாபனமொன்று நிறுவுவதின் மூலமே இத் [illegible]

பொதுமக்கள் ஸ்தாபன ரீதியாக இயங்கவேண்டும். பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்த்துவிடுவதே உகந்தது. ஆட்சிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் எமது இயக்கம் இலட்சியத்திற்காகவே போராடிவருகின்றது. தென்னிலங்கை மக்களுக்கும் வட இலங்கை மக்களுக்குமிடையில் ஒற்றுமை நிலவுவதின் மூலமே சோஷலிச அரசு ஏற்படும்.

நாட்டிலுள்ள பிரச்னைகளைப் போக்கப் பிரதிநிதிகளை ஆட்சிமன்றம் அனுப்பிவிட்டால் மட்டும் போதாது இதன்மூலம் பிரச்னை தீர்ந்துவிடவும் போவதில்லை. ஆத [illegible]

## சோஷலிச நாடுகளுக்கு இலங்கை பொருட்கள்!

கொழும்பு, ஞாயிறு இலங்கையில் தயாராகும் பொருட்கள் சோஷலிச நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. முதல் தடவையாக இப்பொருட்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்ய மக்கள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்து.

இங்கு தயாரிக்கப்பட்ட றப்பர், தும்பு மெத்தைகள் செக்கோஸ்லவாக்கியாவுக்கு நாளை அனுப்பப்படவுள்ளன.

......

## யாழ். நகரில் அல்பதா கூட்டம்

யழ்ப்பாணம், திங்கள் பாலஸ்தீன விடுதலை முன்னணியான அல்பதா இயக்கத்தின் கூட்டமொன்று இம்மாதம் 14-ந் திகதி யாழ்ப்பணத்தில் நடைபெற விருக்கிறது. அல்பதா இயக்க இலங்கைக் கிளையின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்த விருக்கின்றனர்.

சுழிபுரம், ஞாயிறு மட்டக்களப்பு மாநகர சபையில் லிகிதராகக்கடமையாற்றிய திரு. க. சிவலிங்கம், இம்மாதம் தொடக்கம் மானிப்பாய் பட்டின சபைக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். இவர்தொல்பு [illegible]

## அரசியல் சட்டதிருத்த மசோதா நிறைவேறியது!

இலங்கை அரசியல் சட்ட திருத்த மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது. பொதுநிர்வாக உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சமர்ப்பித்த இந்தமசோதா மூன்றில் இரண்டு பெரும்பான்மைவாக்குகளால்நிறைவேறியது.

ராணுவம், பொலிஸ், குறிப்பிட்ட சம்பளத்துக்கு மேல் பெறும் அரசாங்க ஊழியர் தவிர்ந்த சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசியல் உரிமை வழங்கப்படுகிறது.

உள்ளூராட்சி தேர்தல் சட்ட திருத்த மசோதாவும் சபையில் நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா உள்ளூராட்சி ஊழியர்கள் தேர்தலில் போட்டியிட வழிசெய்கிறது.

## குடியிருப்பாளர் பாதுகாப்பு மசோதா நிறைவேறியது!

கொழும்பு, ஞாயிறு வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் சமர்ப்பித்த குடியிருப்பாளர் பாதுகாப்பு மசோதாஇன்று ஆட்சிமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வீட்டுச்சொந்தக்காரர்கள் குடியிருப்பவர்களை அகற்றுவதை இந்தச்சட்டமூலம் தடுப்பதற்கு வகைசெய்யப் பட்டுள்ளது.

இந்தச்சட்டமூலம் இரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும்.

### புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கு

## 'தெற்குப் பக்கமாக எதிரிகள் ஓடினார்கள்'

யாழ்ப்பாணம், திங்கள் பொலிஸ் நிலையத்திலிருந்து புளியங்கூடலுக்கு புறப்படும்போது, எதிரிகளின் பெயர்களோ, சாட்சிகளின் பெயர்களோஎனக்குத் தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்குப் போனபோது சாட்சியங்களை பதிவு செய்தேன். அதன்பின் 1-ம் எதிரியைகைது செய்தேன் 2-ம், 3-ம் எதிரிகளைத் தேடினேன் அவர்களை காணவில்லை.

புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்ட[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று தக்காளி, மாங் காய்களையும் டின்களிலடைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பலாம். மரக்கறிக் கூட்டுத்தாபனமொன்று நிறுவுவதின் மூலமே இத்தகைய பொருளாதார அபிவிருத்திகளைச் செய்ய முடியும்'.

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் திரு. டபிள்யூ. ஏ. தர்மதாசா உடுப்பிட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளனக் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். இக் கருத்தரங்கு நெல்லியடியிலுள்ள கம்யூனிட்ஸ் வாலிபர் சங்கக் கட்டிடத்தில் இளைப்பாறிய ஓவசியர் திரு எஸ்.சபாரத்தினம் தலைமையில் நடைபெறும்.

திரு. தர்மதாசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நாட்டிலுள்ள பிரச்னைகளைப் போக்கப் பிரதிநிதிகளை ஆட்சிமன்றம் அனுப்பிவிட்டால் மட்டும் போதாது இதன்மூலம் பிரச்னை தீர்ந்துவிடவும் போவதில்லை. ஆதலால் மக்கள் ஒன்றுதிரண்டு தங்களுடைய தேவைகளையும் அவற்றின் அவசியத்தையும்பற்றி விளக்கிக் காட்டவேண்டிய நிலையேற்பட்டால்தான் இப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும்.'

திரு தர்மதாசா தமிழிலேயே தனது நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினர், இக் கூட்டத்தில் வெங்காயத்தின் உத்தரவாத விலைத் திட்டத்தை கூட்டவேண்டுமென்றும் பிறநாட்டுக் கோவில்களுக்குச் சொந்தமான காணிகளை அரசாங்கம் சுவீகரித்து அக்காணிகளைப் பொதுமக்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது,

தீர்மானத்தை விடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் மந்திரிசபையின் உபகுழுவிடம் சமர்ப்பித்துள்ளார். இக்குழு நிரந்தர மற்ற ஊழியர்களின்

## அங்கீகரிக்க முடிவு

கோட்டை, ஞாயிறு

இலங்கை மாணவர்களுக்கு சோஷலிச நாடுகளின் பல்கலைக் கழகங்களும் மற்றும் கல்வி நிறுவனங்களும் வழங்கும் கலாநிதிப் பட்டங்களையும் மற்றும் கல்விப் பட்டங்களையும் விரைவில் இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்க விருக்கிறது.

சகல நிரந்தரக் காரியதரிசிகளும் மேற்படி பட்டங்களை ஏற்று விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். சோஷலிச நாடுகளில் மேற்படி பட்டங்களைப் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## வேலை வழங்க திட்டம்

கோட்டை, ஞாயிறு

சுமார் 10,000 ஜி. சி. ஈ. தராதரமுள்ள வாலிபர்களுக்கு உடனடியாக வேலை வழங்குவதற்கான திட்டமொன்றைக் கைத்தொழில் மந்திரி திரு ரி. பி. சுபசிங்கா தயாரித்துள்ளார்.

பயிற்சித்திட்டங்கள் மூலம் இவ்வாலிபர்கள் முதலில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, எழுதுவினைஞர்களாகவும், தொழில் நுட்பப் பிரிவிலும், பயிற்சியளிக்கப்படுவார்கள்.

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும், தனியார் துறை ஸ்தாபனங்களிலும், இவ்வாலிபர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இக்காலங்களில் இவர்களுக்கு அலவன்சாக மாதம் 100 ரூபா வழங்கப்படும். 6 மாதங்கள் பயிற்சியளிக்கப்படும்.

6 மாதம் பயிற்சி பெற்ற பின் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், அரசாங்கத்திலும் தனியார்துறை ஸ்தாபனங்களிலும் வேலைவழங்கப்படும். இத்திட்டத்தை விஸ்தரித்து நாளடைவில் மேலும் பலருக்கு வேலை வழங்கலாம் என அமைச்சு கருதுகிறது.

சபையில் விகிதராகக்கடமையாற்றிய திரு. க. சிவலிங்கம், இம்மாதம் தொடக்கம் மானிப்பாய் பட்டின சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர்தொல்புரம் கிராமத்தைச் சேர்ந்தவராவர்.

ந்து புளியங்கூடலுக்கு புறப்படும்போது, எதிரிகளின் பெயர்களோ, சாட்சிகளின் பெயர்களோஎனக்குத் தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்குப் போனபோது சாட்சிகளாகிய தம்பிஐயா, இராசலிங்கம் ஆகியோரின் ரியைகைது செய்தேன் 2-ம், 3-ம் எதிரிகளைத் தேடினேன் அவர்களை காணவில்லை.

புளியங்கூடல் கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தம்பிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

இவ் வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் புளியங்கூடலில் 69 ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி தில்லையம்பலம் அப்பாத்துரையை கொலைசெய்ய முயற்சித்ததாக வீரகத்தி சின்னத்துரை, சின்னத்துரை கந்தசாமி, சின்னத்துரை தம்பிஐயா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். பி. தம்பிரத்தினம், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் ரி. குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

கான்ஸ்டபிள் தம்பிப்பிள்ளை மேலும் கூறியதாவது: சம்பவம் நடந்தபோது ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் வேலைபார்த்தேன். சம்பவம்பற்றி டெலிபோன் மூலம் தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து புளியங்கூடலுக்குச் சென்றேன். சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டேன்.

இராசலிங்கம் குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது: சம்பவம் நடந்த தினத்திற்கு 2 நாட்களின் பின் ஆஸ்பத்திரிக்கு வந்தேன். தொடர்ந்து மூன்று நாட்களிருந்தேன். நான்தான் டோச் லைட்டைப் பொலிஸாரிடம் பாரம் கொடுத்தேன். எதிரிகள் தெற்குப்பக்கமாக ஓடினார்கள்.

வழ: சம்பவம் நடந்த போது குளறினீரா? ஆம்.

வழ: அந்தச் சத்தத்திற்கு ஆட்கள் வந்தார்களா? ஆம்.

வழ: கணபதிப்பிள்ளையைக் கண்டீரா? கார் பிடித்து வந்தபோதுதான் ஆட்களைக் கண்டேன்.

வழ: கார் பிடிக்கும் போது ஒருவருமில்லை.

இன்ஸ்பெக்டர் செல்லையா சாட்சியமளித்தார் விசாரணை இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கடதாசி கூட்டுத்தாபன தலைவருக்கு அமைச்சர் பாராட்டு

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. வி. தங்கராசாவை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு ரி. பி. சுபசிங்கா இன்று பாராட்டினர். அவருடைய காலத்தில் தான் இக்கூட்டுத்தாபனம் லாபகரமாகவும், நேர்த்தியாகவும் இயங்கி வருவதாவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த அரசங்கத்தில் தனியார்துறை நிறுவனங்கள் மிகவும் நன்ருக வளர்ந்தனவென்றும், ஆனல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் சீரழிந்தனவென்றும் திரு. சுபசிங்கா கூறினர்.

இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் 1963லிருந்து 1967ம் ஆண்டுவரையான ஆண்டறிக்கைகள் இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வறிக்கை சம்பந்தமாக பல அங்கத்துவர்கள் சபையில் விவாதித்தனர்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில், காலம்தாழ்த்தி இவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றனவென்றும் ஒவ்வொரு அரசாங்கமும் மாறும்போது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மாறிக்கொண்டிருந்தால் கூட்டுத்தாபனம்முன்னேற்றமடைய மாட்டாதென்றும், வடக்கிலும் ஒரு கடதாசித்தொழிற்சாலை நிறுவவேண்டுமென்றும் கூறினர்.

கொத்மலை எம். பி. திரு. ஜே. டி.வீரசேகரா பேசுகையில் 7ஆண்டுகாலம் தாழ்த்தி இவ்வறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்படுவது குறித்துக் குற்றஞ்சாட்டினர்.

ஒவ்வொரு வருட முடிவிலும் இவ் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டால் லாபம், நஷ்டம் போன்றவற்றை சுலபமாகப் பார்க்கலாமென்றும் திரு. வீரசேகரா கூறினர்.

கடதாசி தயாரிப்பதற்காகப் பாவிக்கப்படும் மூலப் பொருட்களான கரும்புச் சக்கை, வாழைத்தண்டு, வைக்கல் போன்றவற்றை மக்கள் மிகவும் பாதுகாத்து வைக்க வேண்டுமென்றும், இதனைப் பலர் எரித்துச் சாம்பராக்கிவிடுவதால் நஷ்டமேற்படுகின்றனதென்றும் கொத்மலை எம். பி. சொன்ஞர்.

காலி எம். பி டாக்டர் தஹநாயக்கா பேசுகையில், 1963-ம் ஆண்டு 'நியூஸ் பிறின்ட்' தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த நிபுணர்கள் இங்கு வந்து ஆராய்ந்து சென்றனரென்றும், ஏழு வருட காலம் சென்றும் இதுவரை அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறினர்.

அறிக்கைகள் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

# பொலீஸ் அதிபருடன் டாக்ஸி சாரதிகள் பேட்டி

கொழும்பு,ஞாயிறு

டாக்ஸி சாரதிகளுக்கு பொலிசார் கொடுக்கும் தொந்தரவுகள்பற்றி இன்று காலை, டாக்ஸி சாரதிகள் தூது கோஷ்டியொன்று பொலிஸ் மாஅதிபரை சந்தித்து புகார் செய்தது.

பொலிஸ் இம்சைக்கு இடமே இல்லையென்றும் ஆனல்,விபத்துக்களை தடுக்க போக்குவரத்து சட்டம் அமுல் செய்யப்படுமென்றும்.பொலிஸ் மாஅதிபர் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

நாளாந்தம் அதிகரித்து வரும் வீதிவிபத்துகளில் கூடுதலானவைடாக்சிசாரதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் பல டாக்ஸி நிலையங்களை அமைக்க கொழும்பு மாநகர சபையுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. (சி பி ஏ)

# இந்திரா அரசைக்கவிழ்க்க உடந்தையாக மாட்டோம்

## கருணுநிதி அறிவிப்பு

சென்னை, அக், 11

உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை வைத்துக்கொண்டு இந்திரா தலைமையிலான மத்திய அரசைக் கவிழ்ப்பதற்கு திராவிடமுன்னேற்றக்கழகம் ஆதரவாய் இருக்காதுஎன்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு, மு, கருணுநிதிகூறினர்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர்கள் கிளையின் ஆதரவில் நடைபெற்ற அண்ணு நினைவு விழாவில் திரு. கருணுநிதி பேசினர்.

உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்டிருப்பது சட்டப் பிரச்னை இதற்கு இப்பொழுது உள்ள சட்டத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டுமேயல்லாமல் மத்திய அரசைக் கவிழ்த்து அதன் மூலம் நாடு பூராவுமே ராஷ்டிரபதி ஆட்சியை ஏற்படுத்த இடம் வைக்கலாகாது அதற்கு திராவிட முன்னேற்றக்கழகம் உடந்தையாக இருக்காது என்ருர் திரு. கருணுநிதி,

இந்தக் கூட்டத்தில் ஆந்திரா முதலமைச்சர் திரு, சஞ்சீவரெட்டியும் கலந்து கொண்டார் அவர் பேசுகையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு, கருணுநிதியின் கருத்தில் சில அம்சங்களைத் தாம் ஆதரிப்பதாகவும் மற்றும் சில அம்சங்களை எதிர்ப்பதாகவும் கூறினர், மாநில அபிவிருத்திக்காக மேற்கொண்டும் வசதிகள் செய்துதரவேண்டுமென்றும் அதேசமயம்மத்தியஅரசுபல முள்ளதாக இருக்கவேண்டும் என்றும் திரு, செஞ்சீவ ரெட்டி கூறினர்.

இந்த விழாவில் புதுவை முதலமைச்சர் திரு, பரூக் மரைக்காயரும் கலந்து கொண்டு பேசினர்,

உள்ளூர் உற்பத்தி

# பொருள்களின் தரம்பற்றி ஆராய குழு நியமனம்

கோட்டை, ஞாயிறு

பாவனையாளர்கள் சபையொன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் சம்பந்தமாக ஆராய உள்ளூர் பொருள்களின் தரம் பற்றி அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க 7 பேர் கொண்ட குழுவொன்றை கைத்தொழில் அமைச்சர் திரு ரி. பி. சுபசிங்கா அமைத்துள்ளார்.

பாவனையாளர்களின் நலனைக்கருதியே அமைச்சு மேற்படி குழுவை நியமித்துள்ளது ஏ, டி, விஜயபண்டாவின் தலைமையிலான இக்குழு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரத்தை ஆராய்ந்து அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் குறித்துப் பாவனையாளர்கள் அடிக்கடி செய்யும் புகார்களைத் தொடர்ந்து பாவனையாளர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் உள்நாட்டுஉற்பத்திப் பொருள்களின் தரம் அமையவேண்டும் என்னும் நோக்கம் கொண்டே அமைச்சர் மேற்படி நடவடிக்கையை யெடுத்துள்ளார்,

......

## கரும்புத் தோட்டம் அபிவிருத்தியாகும்

யாழ்ப்பாணம், திங்கள்

அக்கராயன் கரும்புத் தோட்டத்தை மேலும் அபிவிருத்திசெய்ய விவசாய சேவைகள் இலாகா முடிவு செய்துள்ளது. அங்கு கரும்பு உற்பத்தியை பெருக்கவும்; கருப்பம் சாற்றை பரவலாக யந்திர மூலம் வடிக்கவும் ஒழுங்கு செய்யப்படுமென்றும் அறியப்படுகின்றது. கரும்புத் தோட்டங்களில் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் சுமார் 30 ஏக்கர்வரை காடுகளை வெட்டி கரும்புப் பயிர்செய்ய முடிவுசெய்யப் பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. (கு. வி. ம.)

# உள்ளூர் ஜிப்சம்விநியோகம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆனையிறவு கூட்டுத்தாபனம் அதிகளவு ஜிப்சத்தை சேகரித்துள்ளது. உப்புவிளையும் இடங்களுக்கு அண்மையில் உள்ள பகுதிகளில் இந்த ஜிப்சம் பெருந்தொகையாக விளைந்துள்ளது.

உப்புக் கூட்டுஸ்தாபனம் இவற்றைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகித்துவருகிறது. உவர்த் தன்மையுடைய நிலங்களில் நெல் விளைவிப்பதற்காக இந்த ஜிப்சம் உபயோகப் படுத்தப்படுகிறது.

உப்பு விளையும் பகுதிகளுக்கு அண்மையில் பெருமளவில் ஜிப்சம் விளைவதை உப்புக் கூட்டுஸ்தாபனம் கண்டுபிடித்துள்ளதால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜிப்சத்தின் தொகையைக் குறைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை நடத்திவருவதாகத் தெரிகிறது. (குவிம)

# அச்சுவேலியில் கார் மோதி மூதாட்டி மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்லிபுரம் மாணிக்கம்என்னும் 65வயது மூதாட்டி நேற்று முன்தினம் காரினுல் மோதுண்டு மரணமாஞர். இச்சம்பவம் அச்சுவேலியில் நடந்தது.

வயலிருந்து வீதிக்குவந்த மாணிக்கம் மழைத்தூறலில் நனையாதபடி தலையை மூடியிருந்தாரென்றும் அச்சமயம் யாழ்ப்பாணம் நோக்கி வந்தஒருகார் அவரைமோதிவிட்டு நிற்காமல் சென்றதாகவும் பின்னர் அந்தக்கார் பொலிசில் சரணடைந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

மாணிக்கத்தின் மரணம் பற்றி விசாரணை நடத்திய மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆனந்தக்குமாரசாமி சாரதியை ஆயிரம்ரூபா பிணையிலும் மோட்டார் காரை ஐயாயிரம்ரூப பிணையிலும் செல்வதற்கு அனுமதித்தார்.

......

## முதலைத் தோல் எப்படி வந்தது?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் லெப்பை ஒழுங்கையில் சுங்கப் பகுதியினர் ஒரு வீட்டில் திடீர் சோதனையிட்டபோது முதலைத் தோல்கள் பலவற்றைக் கண்டுபிடித்ததாகவும் இத்தோல்கள் யாவும் மேல் நடவடிக்கைகளுக்காக வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### வாடகைக்கு

கன்னாதிட்டிச் சந்தியிலிருக்கும் (R. G. பில்டிங்) சட்டிடத்தில் இரண்டு கடைகள் மட்டும் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: ''ராஜ்கோபால்ஸ்'', 36/1, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 7168. 2404

### விற்பனைக்கு

எம்மிடம் சற்ரே (Satoh) இரண்டு சில்லு நடை டிருக்டர்கள், ஒருவருடம் பாவித்த இரண்டு 25ஸ்ரீ தொடர் இலக்க (Fiat) பியட் டிருக்டர்கள், ரில்லர்கள் 1ஸ்ரீ தொடர் இலக்க N. S. U. மாக்ஸ் மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. திருச்செல்வம் அன் கோ, 41, கோயில் வீதி, யாழ்ப்பாணம் 2329

எம்மிடம் சுவிட்செலாந்தில் தயாரிக்கப்பட்ட (Swiss Make கல்டா (Halda) தமிழ் ஆங்கில தட்டெழுத்து யந்திரங்கள், ஹொன்டா (Honda Generaters) மின்சார யந்திரங்கள், நியூமன் எலெக்ரிக் மோட்டர் (Newman Motor) 2'' பம்புடன் விற்பனைக்குண்டு. திருச்செல்வம் அன் கோ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 2328

யக்கச்சி கிழக்குத் தோட்டம் நூற்றெழுபது ஏக்கர். பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும் கண்டி ரேட், பளை, யக்கச்சி சந்தியிலிருந்து முக்கால் கட்டை. தென்னை, சிறு பயிர்கள், பாற்பண்ணை, கோழிப்பண்ணைக்கு ஏற்ற நிலம், அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். லான்ட் இன்வெஸ்ற்மெண்ட், 6, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2325

### தேவை

சிறு பிள்ளைகளின் கவுன், சேட், பேபி சூட் தைப்பதில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. நேரில் வரவும், M. S. T, K. K. சங்கரப்பிள்ளை கட்டிடம், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2407

### விற்பனைக்கு

புத்தகம்

விற்பனையாகிறது தமிழ் மொழியும் இலக்கியமும் வினாவிடை. எட்டாந்தரம் மூன்றும் பருவம். விலை சதம் 90. சுந்தரம் புத்தக சாலை, அச்சுவேலி. 2331


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 12—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலி பரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 விவசாயநிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 10-00 கதாப் பிரசங்கம், 10-30 செய்தித் தொகுப்பு


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர், — சரோஜாதேவி நம்பியார் — தங்கவேலு நடித்த

# திருடாதே

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

கண்ணன் - ராதிகா தேங்காய் சீனிவாசன் நடித்த

# ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

5-வது வாரம்

வெலிங்டன் யாழ்நகர்


## நெல்லியடி வெற்றி

பருத்தித்துறை, ஞாயிறு

அத்தியார் இந்துக் கல்லூரி மூன்றும் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும், நெல்லியடி மகாவித்தியாலய உதைபந்தாட்டக் கோஷ்டியும் மோதிக் கொண்ட சிநேகபூர்வமான போட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு எம். வேதாபரணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

மேற்படி இரு கல்லூரிகளின் இரண்டாம் பிரிவுகளுக்கான போட்டியிலும் நெல்லியடிக் கோஷ்டி 4-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எம் இராமகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

......

## விக்ரோறியா வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மூன்றும் பிரிவுக் கோஷ்டிக்கும், காரைநகர் இந்துக்கல்லூரி மூன்றும் பிரிவுக் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் விக்ரோறியாக் கல்லூரிக் கோஷ்டியினர் ஆறு கோல்களைப் போட்டு அமோக வெற்றிபெற்றனர். காரைநகர் இந்துக் கல்லூரிக் கோஷ்டியினர் கோல் எதுவும் போடவில்லை. போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி கல்லூரியின் இரண்டாம் பிரிவினரின் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிக் கோஷ்டியினர் ஐந்து கோல்களைப் போட்டு வெற்றிபெற்றனர்

......

## இணுவில் இந்து வெற்றி

உடுவில், ஞாயிறு

இணுவில் இந்து விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட இரண்டாம் பிரிவுக்கோஷ்டிக்கும், கோண்டாவில் உதைபந்தாட்ட இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் சிநேகபூர்வமாக நடைபெற்ற போட்டியில் இணுவில் இந்து 2—1 கோல்களினால் வெற்றியீட்டியது. இணுவிலில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. செ. இலகுநாதன் மத்தியஸ்தம் வகித்தார்,

## நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்

முசலி, ஞாயிறு

## கொழும்பு

# பெனடிக்ற் கோஷ்டி பற்றிக்ஸிடம் தோல்வி!

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்பு சென். பெனடிற் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பலம் கொண்ட சென். பெனடிற் கோஷ்டி தோல்வியடைந்தது.

இந்தப்போட்டி தொடங்கி முடிவடையும்வரை ரசிப்பாகவும் கடும் போட்டியாகவும் காணப்பட்டது. ஆட்ட நேரத்தின் போது பெனடிற் கோஷ்டியினர் மிகக் கூடுதலாக முறைதவறி விளையாடியதால் பலமுறை இக்கோஷ்டியின் வீரர்கள் பலர் மத்தியஸ்தரால் எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். இச்சந்தர்ப்பத்தில் சென் பற்றிக்ஸ் கோஷ்டியினருக்குகிடைத்த தண்டனை உதையின் மூலம் முதலாவது கோலை இக்கோஷ்டியின் பின்னணி வீரர் எம். விமலதாஸ் போட்டார் இடைவேளையின் போது சென். பற்றிக்ஸ் 1— 0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் சென் பற்றிக்ஸ் கோஷ்டி வீரர்களின் விளையாட்டு மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. இக்கோஷ்டியின் காப்டன் ஏ. எஸ். கொன்ஸலஸ் எதிர்க்கோஷ்டியினரும் ரசிகர்கள் கூட்டமும்சற்றும் எதிர்பாராத விதத்தில் மின்னல்வேகத்தில் இரண்டாவதுகோலைப் போட்டார் மேற்படிக் கோஷ்டியின் இடதுகரை முன்னணி வீரர் செல்வராசா ஆட்டம் முடிவதற்கு பத்து நிமிடங்கள் இருக்கும்போது எதிர்க் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் பலரை ஏமாற்றி மூன்றுவது கோலைப் போட்டார் எதிர்க் கோஷ்டியான கொழும்பு சென். பெனடிற் கோஷ்டியினர் ஆட்டம் முடிவடையும்வரை தம்மால் இயன்றளவு ஒருகோலையாவது போடுவதற்கு எடுத்தமுயற்சிகள் பயனளிக்காது போய் விட்டன.

ஆட்டமுடிவில் சென் பற்றிக்ஸ் கோஷ்டியிடம் சென். பெனடிற் கோஷ்டி 3—0 கோல்களால் தோல்வியடைந்தது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்

(தே. நி)

## மெமோரியல் வெற்றி

உடுவில், ஞாயிறு

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்க ஆதரவின் கீழ் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட மூன்றும் பிரிவில் மானிப்பாய்மெமோரியல் கோஷ்டியினர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரிக் கோஷ்டியை 2—1 கோல்களால் வெற்றியீட்டினர்.

பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 26-ம்திகதி

(12-10-70)

மேஷம்- வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கும் இடமுண்டு. அமைதி வேண்டும்.

ரிஷிபம்- தன்மான மிகுக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் இடைக்கும். கல்வியில் முன்னேற்றமுண்டு

மிதுனம்- ... பிறக்கும். குடும்... சுமுகமான ...

# செய்திச் சுருக்கம்

### மட்டக்களப்பு மாநகரசபை தேர்தல்

மட்டக்களப்பு மாநகர சபையின் இரண்டாவது பொதுத்தேர்தலுக்கான நயமனப்பத்திரங்கள் இம் மாதம் 31-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட விருக்கின்றன.

### 200 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

கொழும்புப்பகுதியில் உள்ள சுமார் 200 பட்டதாரிகளுக்கு நேற்று முன்தினம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன இம் மாதம் 15-ம் திகதிமுதல் இவர்கள் கஷ்டமான பிரதேசங்களில் பணிபுரிவர்.

### 6 எதிரிகளுக்கு 6 மாதச்சிறை

அட்டன்மேபீல்ட்தோட்ட பொலிஸ் - தொழிலாளர் மோதல் வழக்கில் எதிரிகளான தொழிலாளர்களில் 27 பேரில், பெண்கள் உட்பட 21 பேரை அட்டன் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார் மற்றைய ஆறு எதிரிகளுக்கும் ... தலா

### தலைமன்னார் ராமேஸ்வர கப்பற்சேவை

தலைமன்னா, ஞாயிறு

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல்சேவை இம் வாதம் 29-ம் திகதியிலிருந்து நிறுத்தப்படவுள்ளது. நவம்பர் டிசம்பர் மாதங்களில் இச்சேவை நடைபெறுது ஜனவரியிலிருந்து வழமைபோல் சேவை நடைபெறும் காலநிலை மோசமாகி விட்டதே இச்சேவை நிறுத்தத்திற்குக் காரணமாகும்.

### விண்ணப்ப திகதி நீடிப்பு

பொலிஸ் கான்டபிள் பதவிகளுக்கான விண்ணப்ப இறுதித்திகதி ம்மாதம் 23-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

### தனியார்துறைக்கு திருப்பிக் கொடுபடமாட்டாது

புகையிரத சிற்றுண்டிச் சாலைகள் தனியார்துறைக்குத் திருப்பிக் கொடுபடமாட்டாதெனவும் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் புகையிரத சிற்...

## புதிய நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டி வல்லை கூட்டுறவு வைத்தியசாலையின் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு சி. குமாரசாமிதலைமையில் நடைபெற்றது.

ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் வைத்தியர் இல்லம் பிரசவ விடுதி வெளிநோயாளர் நிலையம் முதலியன கட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சி குமாரசாமி உபதலைவர் எம் ,வைத்திலிங்கம், எஸ், எஸ். செல்லத்துரை, செயலாளர்; எஸ் பி இராசா தனாதிகாரி எஸ் கே. சின்னத்தம்பி, மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக நான்குபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை ஆயுர்வேதவைத்தியக் கல்லூரி மாணவர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. ஆர். ஈ. டபிள்யு ஜெகோரத்தினம் தலைமையில் நடைபெற்றது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வி ஏ. மேரிராணி, உபதலைவர்: பி, ரி. இராஜகம்பீரம், செயலாளர்: எஸ். சர்வேஸ்வரன், பொருளாளர்: எம். ஜி. தில்லைநாயகம், பத்திராதிபர்: செல்வி எஸ். பத்மாவாதி, உதவி பத்திராதிபர்: செல்வி கே. இந்துமதி,

எம். சரோஜினிதேவி, எம். என். ஜெயமலர், என். கதிரவேற்காந்தி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

எழுதுமட்டுவாள், ஞாயிறு

கைதடியில் உள்ள கட்டிடத் தொழிலாளர்கள்ஒன்றுகூடி தொழிற்சங்கமொன்றை அமைத்துள்ளனர் அதன் நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: ஜனாப் பி. இஸ்மயில் உப தலைவர்; திரு. ரி. பொன்னுச்சாமி காரியதரிசி: திரு. எஸ். சிதம்பரநாதன் உபகாரியதரிசி திரு. ரி. கணபதிப்பிள்ளை தனாதிகாரி திரு. வி. சின்னத்தம்பி 6 பேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது,

கோளாறினால் மரணமாகியுள்ளனர் என்று கொழும்பு

## சரஸ்வதி கலையகம்

உடுவில், ஞாயிறு

இளைஞர்களிடையே சமய வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் சிறுவர்களைச் சிறுவயது முதலே சமயப்பற்றுள்ளவர்களாக்குவதற்கும் இதுபோன்ற கலையகங்கள் கிராமங்கள்தோறும் ஆரம்பிக்க வேண்டும். என்று இணுவிலில் சரஸ்வதி கலையகத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய திரு தி. திருநந்தகுமார் கூறினார்.

சரஸ்வதி கலையக உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:

தலைவர் திரு வி. கலாதரன், உபதலைவர் திரு த. ஸ்ரீஸ்கந்தராசா செயலாளர் திரு தி. திருநந்தகுமார். உப செயலாளர்: திரு வே. உமாமகேஸ்வரன் தனாதிகாரி திரு இ. பொன்னம்பலம், உபதனாதிகாரி திரு. க. வசந்தன்.

7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## உதைபந்தாட்டப் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனா யூனியன் கல்லூரி கோஷ்டிகளின் ருசிகரமான உதைபந்தாட்டப்போட்டி இன்று நடைபெறவிருக்கிறது. மேற்படி கல்லூரிகளின் 2-ம், 3-ம் பிரிவுகளுக்கிடையில் யாழ் மாவட்ட பாடசாலை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்கீழ் நடைபெறும் இப்போட்டிகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

... ...

## ஓய்வு பெறுகிறார்

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவு மருத்துவ மனையில் கடந்த 18 ஆண்டுகளாக கடமையாற்றிய திருமதி அந்தோனி பெர்னாண்டோ செல்லம்மா இம் மாதம் 21'ம் திகதி ஓய்வு பெறுகின்றார். இவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டி ஊர்மக்கள் ஒரு சேவைநல விழா கொண்டாடிச் சிறப்பிக்க சகல ஏற்பாடுகளும் செய்துவருகின்றனர்.

......

## பாரதி விழா

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் 13ந் திகதி செவ்வாய்க்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் தனது ஆறுவது வருடத் தொடர்ச்சியாகப் பாரதி விழாவைக் கொண்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரு வீரம் ... சித்திரம்)

5-வது வாரம்

**வெலிங்டன்** யாழ்நகர்

(2-30, 6-30, 9-30) போயாதினங்களில் 4 காட்சிகள்

இன்று முதல்

**கிங்ஸ்லி** (கொழும்பு)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாம் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.

உணர்ச்சி ஓவியம் . . .

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

நடித்த

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

இன்று முதல்

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

★ சிவாஜி ★ சௌகார் ஜானகி

சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

# உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]


இடைக்காட்டிக்கு திரு. செ. இலகுநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்திலுள்ள மேற்குமூலை கிராமசபையின் அபேட்சகர் தெரிவுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் பததொன்பதாம் திகதி தாக்கல்செய்யப்படவிருக்கின்றன.


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

மனோகர் — மணிமாலா

நடித்த

**எதிரிகள் ஜாக்கிரதை**

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்

தினசரி 2-30, 6-30, 9-30

சிவாஜி-பத்மினி

நடித்த

**செந்தாமரை**

MANOHARA
Jaffna

Daily 4-45, 7 & 9-45 p m
Suzy Kendall
James Booth
in
FRAULEIN DOKTOR
(Strictly for Adults)

REGAL
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p. m.
Poya days 4 Shows

GLAMOROUS WOMEN OF THE WORLD
(Adults only)


...ரும் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும். கல்வியில் முன்னேற்றமுண்டு

மிதுனம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். மதிப்புஉயரும்

கடகம்- பணம் பல வழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். நிதானம் வேண்டும்.

சிம்மம்- வெற்றி உமது அருகில் விரைந்துவரும்: காதலர்களுக்கு இனிப்பான தினம்.

கன்னி- அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். அடக்கம் வேண்டும்.

துலாம்- பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள் மகிழ்ச்சியான தினம்.

விருட்சிகம்- வியாபாரத் துறையில் முன்னேற்றம் தென்படுகிறது. செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு- கை நிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும். வெளியூர் பயணம் ஏற்படலாம்.

மகரம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். நிதானம் வேண்டும்.

கும்பம்- முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். அமைதி நன்று.

மீனம்- போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள். தொழில்துறையில் வெற்றியும் உண்டு.

சோதிடக் கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

...களான தொழிலாளர்களில் 27 பேரில், பெண்கள் உட்பட 21 பேரை அட்டன் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார் மற்றைய ஆறு எதிரிகளுக்கும் தலா ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சென்றவருடம் நவம்பர் மாதம் மேபீல்ட் தோட்ட வேலை நிறுத்தத்தின் போது பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## "மக்களுக்கு சேவைசெய்ய வந்தோம்"

அட்டன், ஞாயிறு

தேர்தல் காலத்தில் நாங்கள் மக்களிடையே பல வாக்குறுதிகளைக் கொடுத்தோம். அவற்றை விரைவில் நிறைவேற்ற ஒழுங்குகள் செய்துகொண்டுவருகிறோம். இரண்டரை ஆண்டு காலத்தில் நாம் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்,

தலவாக்கொல்லை சிறிசுமனவித்தியாலயத்தில் நடைபெற்ற அகிலஇலங்கை நகரசபை சங்க ஆண்டுவிழாவில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''நாட்டை ஆளுவதற்காக மட்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்கவில்லை மக்களுக்கு உண்மையான சேவை செய்யவே ஆட்சிப்பொறுப்பை ஏற்றோம் நாட்டும் மக்கள் நிலை உயரவேண்டுமென்பதே எமது அவா என அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

புகையிரத சிற்றுண்டிச் சாலைகள் தனியார்துறைக்குத் திருப்பிக் கொடுபட மாட்டாதெனவும் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் புகையிரத சிற்றுண்டிச்சாலைகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளவெனவும் புகையிரத ஜெனரல் மனேஜர் திரு வி. ரி. நவரட்ண தெரிவித்தார்.

## லொறியைக் கடத்தி கொப்பரு கொள்ளை

புத்தளப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி கொப்பரு ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கடத்திச் செல்லப்பட்டு அதிலிருந்த கொப்பரு கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதுடன் லொறியின் சாரதியும் கிளீனரும் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக தாக்கப்பட்ட இருவரும் மாதம்பை பொலிசில் முறையிட்டுள்ளனர் இதைத் தொடர்ந்து கடத்திச் செல்லப்பட்ட லொறி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொலிசார் தீவிர விசாரணை செய்கின்றனர்.

## இஸ்லாமிய ஆராய்ச்சித் துறை

இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்டுவந்த இஸ்லாமிய ஆராய்ச்சிப் பாடங்களுக்கு இனிமேல் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவுள்ளது. இதற்கான திட்டமொன்றைமேற்படி பல்கலைக்கழக அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர்.

## இருதய கோளாறுக்கு 769 பேர் பலி

கொழும்பு நகரத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் 769 பேர் இருதயக்

...ண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கோளாறினால் மரணமாகியுள்ளனர் என்று கொழும்பு மாநகர சுகாதாரப் பகுதியின் புள்ளிவிபர அறிக்கை தெரிவித்துள்ளது.

## கண்டனத் தீர்மானம்

கினிகொல்லைத் தோட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி மாவட்டதோட்ட சபா தலைவர்களின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

...பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் தனது ஆறுவது வருடத் தொடர்ச்சியாகப் பாரதி விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

இவ்விழாவில் கவியரங்கம், சொற்பொழிவு, இசை, நடன நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறுகின்றன.

## வரிப்பணம்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடிப் பட்டினசபையில் அறவிடப்படாதிருக்கும் வரிப் பணங்களை வசூல் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். பி. தேவசகாயம் மேற்கொண்டுள்ளார்.


**தற்பொழுது அச்சிலிருக்கின்றது!**

# 'ஈழநாடு' தினக்குறிப்பு 1971

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

தினக்குறிப்பு 1971

'ஈழநாடு'

தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

# யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் — காஞ்சனா

மஞ்சுளா - நாகேஷ் - ரமாபிரபா

நடித்த

# சாந்தி நிலையம்

# தீபாவளி மலிவு விற்பனைக்காக

புதிதாக வரவழைக்கப்பட்ட

★ ரெற்றன் செக்ட் சேட்ஸ் ★ கிளேஸ் கொட்டின்ஸ்

★ ரெற்றன் சேட்டிங்ஸ் ★ சின்டெக்ஸ் சூட்டிங்ஸ்

# டயரும்ஸ்

54, 60, மெயின்வீதி, (தொலைபேசி: 316) யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் மந்திரி ஒருவரை பயங்கரவாதிகள் கடத்தினர்

ஒட்டாவா, அக். 11

**கனடாவில் பயங்கரவாதிகள் மேலும் ஒரு பிரமுகரை கடத்திச் சென்றுள்ளனர்.**

**இம்முறை குவபெக் ராஜ்யத்தின் அமைச்சர் ஒருவரை பயங்கரவாதிகள் கடத்தியுள்ளனர்.**

ஏற்கனவே கடத்திச் செல்லப்பட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரி ஜேம்ஸ்குரொஸ் என்பவரை விடுதலைசெய்வதற்கு பயங்கரவாதிகள் விதித்த நிபந்தனைகளை கனடா அரசாங்கம் நிராகரித்த 30 நிமிடங்களுக்குள் இந்தப் புதிய கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

குவபெக் தொழிலாளர்நல மந்திரி அவரது வீட்டிலிருக்கும்போது பயங்கரவாதிகள் இருவர் யந்திர துப்பாக்கியுடன் வந்து கடத்திச் சென்றுர்கள், கடத்தப்பட்ட சமயம் அவர் தமது மகனுடன் பந்து விளையாடிக்கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார் நாடுமுழுவதும் உஷார் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறுர்கள்.

பிரிட்டிஷ் ராஜதந்திரியை விடுதலை செய்வதற்கு பயங்கரவாதிகள், சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமது சகாக்கள் விடுவிக்கப்படவேண்டுமென்றும் தாம் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் பிரிட்டிஷ் ராஜதந்திரி கொலைசெய்யப்படுவார் என்றும் அறிவித்திருந்தனர். இந்த நிபந்தனைக்கு இணங்க கனடா அரசாங்கம் மறுத்துவிட்டது. ஆனல் பிரிட்டிஷ் ராஜதந்திரி விடுவிக்கப்பட்டால்சிறையிலிருக்கும் அவர்களின் சகாக்கள் அனைவரும் அவர்கள் விரும்பும் வேறு ஒரு நாட்டில் கொண்டுபோய் இறக்கப்படுவார்கள் என்றும் அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பு வந்த சுமார் 30 நிமிடங்களில் குவபெக் தொழிலாளர் மந்திரி கடத்திச்செல்லப்பட்டார். ஆயுதங்களுடன் வந்த இருவர் அவரைக் கார்ஒன்றில் ஏற்றி விரைந்து கொண்டுசென்றுவிட்டார்கள்.

## நெரிசலில் 48பேர் மரணம்

கெய்ரோ, அக்.11

காலஞ்சென்ற ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் நாஸரின் சவ ஊர்வலத்தின் பொழுது நெரிசலில் 48 பேருக்கு மேல் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

நெரிசலில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது. நெரிசலில் காயமடைந்த 80 பேருக்கு மேற்பட்டவர்கள் இன்னமும் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகிறுர்கள்.

## ஆபிரிக் நாடுகள் குழு

லண்டன், அக் 11

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதற்கு எதிராக ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் குழு தெரிவிக்கும் கருத்துக்களுக்குச் செவிசாய்க்க பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு. ஹீத் இணங்கியிருக்கிறுர். சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டாவின் தலைமையில் ஒரு குழு விரைவில் லண்டன் வரவிருக்கிறது.

## விமானக் கடத்தலில் மாணவர்கள்

டெஹ்ரான், அக்.11

ஈரான் ஜெட் விமானம் ஒன்றை இரு மாணவர்கள் பாக்தாத்துக்கு கடத்திச் சென்றுள்ளனர்.

சிறை வைக்கப்பட்டுள்ள தங்களின் சகாக்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று இவர்கள் பாக்தாத் அதிகாரிகளுடன் தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்தபொழுது கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் ஈரானுக்குத் திருப்பியனுப்பும்படி ஈரான் கேட்டுள்ளது. விமானத்தை இவர்கள் திசை திருப்ப முயற்சி செய்கையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிப்பந்தி காயமடைந்தார்.

விமானம் அதில் பிரயாணம் செய்தவர்களுடன் இப்பொழுது தெஹ்ரானுக்குத் திரும்பியுள்ளது.

ஐ. நா.வில் பிஜி

## யு. எஸ். மட்டும் எதிர்த்தது

நியுயோர்க், அக்.11

சுதந்திரம்பெற்ற பிஜித் தீவுகளை ஐ. நா. வில் அங்கத்துவ நாடாகச் சேர்த்துக் கொள்ளும்படி பாதுகாப்பு சபை மகாசபைக்கு சிபார்சு செய்துள்ளது.

அங்கத்துவம் கோரி பிஜி நாடுசெய்துகொண்ட மனு பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாலு நாடுகள்வாக்கெடுப்பில் கலந்துகொள்ள...

ஜோர்டான் கலவரத்திஞல்

## கொமாண்டோ ஒற்றுமைக்கு வழியேற்பட்டதாம்

அம்மான், அக் 11

ஜோர்டானிய துருப்புகளுக்கும் அரபு கொமாண்டோக்களுக்குமிடையில் ஏற்... அரபாத் தெரிவித்திருக்கிறுர்.

ஜோர்டான் ராணுவ அதிகாரிகளுக்கும் கொமாண்...

# சந்திர வீரர்கள் இந்தியா வருகிறுர்கள்

புதுடில்லி, அக்.11

சந்திரத் தரையில் இறங்கி நடமாடிய இரு வீரர்கள் அடுத்தமாதம் இந்தியாவுக்கு வருகிறுர்கள்.

அப்பலோ -11 கலத்தின் தலைமை விமானியாக விளங்கியவரும் அம்புலியில் முதன் முதல் காலடியைப் பதித்தவருமான நீல்ஆம்ஸ்ரோங்கும், அப்பலோ-12 கலத்தின் தலைமை விமானியாக விளங்கிய சார்ல்ஸ் கான்ராடுமே அவ் விரு வீரர்களும்.

நவம்பர் 22 முதல் 28 வரை புதுடில்லியில் இந்தியாவின் விமானச் சங்கத்தினுடைய ஆதரவில் (எஃப் ஏ.ஐ எனப்படும்) உலக விமான இயல் கழகத்தின் 63-வது பொது மாநாடு நடைபெறும் இருவரும் அம்மாநாட்டிற்கு வருகிறுர்கள்.

இவர்கள் இருவருக்கும் அந்த மாநாட்டில் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும் ராஷ்டிரபதி வி. வி. கிரி அவற்றை வழங்குவார். ஆம்ஸ்ரோங் பெறும் பதக்கம் 'விண்வெளியில் அரியன செய்தவர்க்கு' எஃப். ஏ. ஐ. அளிக்கும் தங்கப் பதக்கமாகும்.

கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்பு எஃப், ஏ, ஐ மாநாடு நடந்த அதேசமயம் அம்புலித் தரையில் இறங்கிய கொன்ராடு 'அமைதியான பணிகளுக்காக விண்வெளியை மனிதன் வெற்றி கொள்வதில் வியக்கத்தக்க சாதனைகள் புரிந்தவர்' என யூரிகாகரின் தங்கப் பதக்கம் பெறுவார். (யூரி காகரின் 1961 ஏப்ரல் 12ம் தேதி பூமியைச் சரிவர வலம்வந்த முதல் மனிதன்)

## புதுடில்லி விஞ்ஞான மகாநாடு இலங்கையருக்கு அழைப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 14ந்திகதி தொடக்கம் 18ம்திகதி வரை புதுடில்லியில் நடக்கவிருக்கும் விஞ்ஞான மாநாடொன்றிற் கலந்து கொள்ளுமாறு யூனெஸ்கோவின் ஆசிய அதிபர் திரு. ஈ. நாகர்ஜி வடமாநில விஞ்ஞானக் கல்வியதிகாரியும், யூனெஸ்கோவினுல் சிறந்த விஞ்ஞான ஆசிரியர் என விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமான திரு. எம். அற்புதநாதனுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இவ்வழைப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:-

'தங்கள் அனுபவம் கல்விப் பின்னணி தகைமைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே, இவ்வித மகாநாட்டில் தாங்கள் கலந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இவ்வழைப்பை மகிழ்ச்சியுடன் விடுக்கிறேம்'

திரு. அற்புதநாதனின் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றும் இம்மாநாட்டில் இடம் பெறுமெனத் தெரிகிறது.

## 'சிறுபான்மைத் தமிழரை தனியினமாக்கப்படாது'

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மைத் தமிழர்களைத் தனிஇனமாகப் பிரிக்கக்கூடாது: கடந்த காலத்தை... பெரும்பான்... டையே மனமாற்றம் ஏற்பட்டு...

பெற்றது. கூட்டத்துக்கு யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. அல்பிறட் துரையப்பா தலைமை வகித்தார். திரு. அல்பிறட் துரையப்பா ...யில் ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசாங்கத்தின் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தரமான சஞ்சிகைத் தடை எமது இலக்கியத் தரத்தை உயர்த்தாது'

## முன்னுள் உப சபாநாயகர் அறிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

"தமிழகத்திலிருந்துஇங்கு வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளைத் தடைசெய்யும் திட்டம் மிகவும் ஆழ்ந்து பரிசீலனை செய்யப்படவேண்டும். ஈழத்துத் தமிழ் இலக்கியத் தரத்தை அதிகரிப்பதற்கு வெளிநாட்டுச் சஞ்சிகைகளைத் தடைசெய்ய வேண்டிய அவசியத்தைநான் வெளிப்படையாக ஆதரிக்கின்றேன். ஆனல் தமிழகத்திலிருந்து வரும் தரமான சஞ்சிகைகளைத் தடைசெய்வதால் எமது இலக்கியத்தரம் உயரும் என்று எதிர்பார்க்க முடியாது."

இவ்வாறு முன்னுள் உப சபாநாயகரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திரு. மு. சிவசிதம்பரம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"'ஆபாசமான' சஞ்சிகைகளையே பொதுவாகத்தடை செய்யவேண்டும் இதற்காகத் தமிழகச் சஞ்சிகைகளை மட்டும் குறிப்பாகத் தடை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமில்லை. இலக்கியத் தரமற்ற ஆபாச நூல்கள் பிறநாடுகளிலிருந்தும் இங்கு வரத்தான் செய்கின்றன. இலங்கையிலும் தரக்குறைவான சஞ்சிகை, பத்திரிகைகள் வெளிவருகின்றன.

உண்மையில் எமது இலக்கியத் தரத்தை உயர்த்த வேண்டுமென அரசாங்கம் கருதினுல் இலங்கைக்குவரும் தரம்குறைந்த சகலமொழிச் சஞ்சிகைகளும் தடைசெய்யப்படவேண்டும். இப்பிரச்னையை அரசியல் கண்கொண்டு நோக்குவது அரசியல் தலைவர்களுக்கு அழகல்ல.

# "உரிமை பெறும் வரை தனிச் சமூகப் பிரகடனம் வேண்டும்"

## மகாசபை செயலாளர் பேச்சு

உடும்பராய், ஞாயிறு

"சிறுபான்மைத் தமிழர் சமூகத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் காலத்துக்குக்காலம் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பலனுகத்தான் எமது உரிமைகள் சிறிதேனும்கிடைக்க முடிந்தது. கடந்த காலங்களில் எமது சமூக மக்கள் அனுபவித்த கஷ்ட துன்பங்கள் கணக்கிலடங்கா. எமது சமூகத்தினர் உரிமைகளுக்காகப்போராடியதனுல் உயிர்களை இழந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு எவ்வளவோ இன்னல்களை அனுபவித்தார்கள். இப்பிரச்னைகளை தீர்க்கவேண்டுமானுல் அரசியல் பிரதிநிதித்துவமும்எமக்கும்அவசியம், எமது குறைகளை அரசினருக்கு சரிவர எடுத்துக்கூறுவதற்கு எமக்கென ஒரு பிரதிநிதி அவசியம் எமது குறைகளை எமது சமூகத்துப் பிரதிநிதி ஒருவரால்தான் நன்கு எடுத்துக் காட்ட முடியும்"

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஊர்காவற்றுறைக் கிளை அங்குரார்ப்பணவிழாவில் பேசிய மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு. எஸ் செல்லையா இவ்வாறு கூறினுர். மகாசபை உப தலைவர் ... வரைப்போல் சமத்துவமாக வாழும் வரைக்கும் எமது சமூகம் தனிச் சமூகமாக இயங்க அரசியல் திட்டத்தில் அமைக்க வழிவகுக்க வேண்டும்".

பின்வருவோர்கிளை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு எம் ஆறுமுகம் ஜே பி, உபதலைவர்கள்: திருவாளர்கள் தெ சூசைநாயகம், வ முருகா, க கந்தையா, காரியதரிசி: திரு எஸ் கந்தசாமி, உப காரியதரிசி: திரு கு மத்தியாஸ். தனுதிகாரி: திரு மு அமிர்தம், 50பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# அரசியல் சட்ட அமைச்சுக்கு சைவ அனுட்டானசபைமகஜர்

மாவிட்டபுரம், ஞாயிறு

"சைவ ஆலயங்களின் புனிதத்தன்மையை மாசுபடுத்தும் செயலில் ஈடுபடுபவர்களை தண்டனைக் குட்படுத்தக்கூடிய ஷரத்து புதிய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்று அரசியல் சட்ட அமைப்பு அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்பு சபை கோரியுள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

▪ சைவசமயத்தைப் பேணிக்காக்க இப்போ...

0 சைவக் கோவில்களின் புனிதத் தன்மையைக்கெடுக்கும் செயல்கள் தண்டிக்கப்படவேண்டிய குற்றமாக கருதவேண்டும்.

வேறும்பல அம்சங்கள் மகஜரில் சேர்க்கப்பட்டுள்ளன.

## கேதாரகௌரி விரதம்

முசலி, ஞாயிறு

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு இருபத்தொரு நாட்கள் விசேட பூசையும் லட்சார்ச்சனையும் இம்முறை முதல்முதலாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# வழியேற்பட்டதாம்

அம்மான், அக் 11

ஜோர்டானிய துருப்புகளுக்கும் அரபு கொமாண்டோக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலின் காரணமாக கொமாண்டோ ஸ்தாபனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாக பாலஸ்தீன விடுதலை இயக்கங்களின் தலைவர் யாஸர் அரபாத் தெரிவித்திருக்கிறார்.

ஜோர்டான் ராணுவ அதிகாரிகளுக்கும் கொமாண்டோக்களுக்குமிடையில் இப்பொழுது புதிய ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டிருக்கின்றது அமைதியைப்பாதுகாப்பதற்கு இருதரப்பினரும் இந்த ஒப்பந்தத்தில் இணங்கியுள்ளனர்.

அங்கத்துவம் கோரி பிஜி நாடுசெய்துகொண்ட மனு பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாலு நாடுகள்வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அமெரிக்கா மாத்திரம் எதிர்த்து வாக்களித்தது.

# அரபுக் குடியரசுக்கு அதிகாரியாக நியமனம்

வெள்ளவத்தை, சனி

இலங்கை வெளிநாட்டு இராச தந்திர சேவையைச் சேர்ந்தவரும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சில் தற்போது உதவிக் காரிய தரிசியாக இருப்பவருமான திரு என்.கே.இராஜலிங்கம் ஐக்கிய அரபுக் குடியரசின் இலங்கை ஸ்தானிகராலய மூன்ருவது காரியதரிசியாக பதவி உயர்வு பெற்று இம்மாத இறுதியில் கெயிரோ செல்லவிருக்கிருர்,

இறுதியாக நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை, கடல் கடந்த தேச நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் கடல்கடந்த தேச நிர்வா சேவையில் தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டுபேரில் இவர் ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஸ்தானிகராலயங்களில் பயிற்சியளிக்கப்பட்ட பின், சமீபத்தில் நடாத்தப்பட்ட சர்வதேச விவகாரங்கள், இராசதந்திர நடைமுறைகள்பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடர்ந்து இராச தந்திர சேவைக்காக கெயிரோவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பேராதனை பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் நாவலர் உயர் கல்விக் கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராக கடமையாற்றியவர். இவர் நயினதீவு காலஞ்சென்ற நாராயணபிள்ளை கனகரெத்தினம் தம்பதிகளின் புத்திரராவார்.

## வரியிறுப்பாளர் நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்பாளர் நலன்புரி சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. ஐ. ராஜசூரியர் உபதலைவர்கள் திரு எஸ். எவ். அல்போன்ஸ் திரு ஆர். ஆர். தங்கராசா திரு. வில்லியம் மேதர், காரியதரிசி திரு. ரி. பூபாலன் தனுதிகாரி, டாக்டர் டி. பி. சுந்தரம் பிள்ளை.

15 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது"

அனலைதீவுக்கரையில்

## இனந்தெரியாத பிரேதம்

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவுக்குச் சொந்தமான புளியந்தீவுக் கடற்கரையோரமாக அடையாளம் காணமுடியாத ஒரு ஆண் பிரேதம் வெள்ளிக்கிழமை கரைசேர்ந்தது.

அனலைதீவு மக்கள் இதனைக்கண்டு கிராம சேவையாளருக்கும் திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் அறிவித்தனர் இதனைத் தொடர்ந்து தீவுப் பகுதி காரியாதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் விஜயராசா பிரேத பரிசோதனை செய்தார் இது அடையாளம் காண முடியாத 30 வயது மதிக்கத்தக்க ஆணின்பிரேதமாகும்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு க. சிவனடியான் ஸ்தலத்தில் விசாரணை செய்து நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பு வழங்கினுர். பிரேதத்தின் உடம்பில் எம்-3 என்று அடையாளமிடப்பட்ட சட்டை காணப்பட்டது.

## முத்தமிழ் விழா நடத்த முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் பாரதி மன்றத்தின் ஆதரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது இதற்கென மன்ற வாலிபர்கள் விசேஷ பூசையொன்றுநடாத்தினர்.

சங்கத்தின் உபதலைவரான திரு. சூரியர் தலைமையில் நடந்த விழாவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கூடிய விரைவில் முத்தமிழ் விழாவொன்று பாரதி மன்றத்தால் எடுக்கவேண்டுமென்றும் விழாவை சுமார் 12 நாட்களுக்கு கொண்டாடுவதெனவும், 4 நாட்கள் கருத்தரங்குகள், 4 நாட்களுக்கு இசையரங்குகள், 4 நாட்களுக்கு நாடக அரங்குகள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது இவற்றில் கருத்தரங்குகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடாத்துவதெனவும், நாடக அரங்குகளை நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாசாலையில் நடாத்துவதெனவும், இத்துடன்யாழ்ப்பாணத்திலுள்ள தரமான நாடகங்களை மேடையேற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## கனிப்பொருள் ஆராய்ச்சி

கொழும்பு, ஞாயிறு

நாட்டிலுள்ள கனிப்பொருள் வளங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. இதுசம்பந்தமாக இலங்கை அரசுக்கு ஆலோசனைகள் கூறவும், உதவிகள் புரியவும் சீனுவிலிருந்து நிபுணர் குழுவொன்று அழைக்கப்படுமென்று தெரிகின்றது.

இது சம்பந்தமாகச் சீன அரசாங்கத்துடன் அண்மையில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னு சீனு சென்றபொழுது ஆலோசித்ததாகவும் தெரிகின்றது.

றுபான்மைத் தமிழர்களைத் தனிஇனமாகப் பிரிக்கக்கூடாது: கடந்த காலத்தைவிட இப்போது பெரும்பான்மை இனமக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது பலதுறைகளிலும் வேறுபாடற்றநல்ல சுமுகமான நிலை உருவாகி வருவதைக் காண்கின்ருேம். நாமும் தமிழர்கள் என்ற வகையிலேயே முன்னேறிச் செல்லவேண்டும்.''

இவ்வாறு வழக்கறிஞர் திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் நேற்று யாழ்ப்பாணம் வை. எம் சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினுர்.

திரு. ஏ. சிவயோகநாதனுக்கு சமாதான நீதிபதிப் பட்டம் கிடைத்தமையைப் பாராட்டி இக்கூட்டம்நடை யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. அல்பிறட் துரையப்பா தலைமை வகித்தார். திரு. அல்பிறட் துரையப்பா பேசுகையில் ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசாங்கத்தின் கீழேதான் சிறுபான்மையினர்களின் உரிமைகள் கவனிக்கப்படுகின்றன என்ருர்.

திருவாளர்கள் பெனடிக்ட் குணரத்தினம் ஜே. ஐ. இராஜரத்தினம், என். ரி. செல்லத்துரை, என். அந்தோனிப்பிள்ளை ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

திரு. சிவயோகநாதன் பேசுகையில் தனக்குக் கிடைத்த சமாதான நீதிபதிப்பட்டத்தை சமுகத்தவரின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவேன் என்று குறிப்பிட்டார்.

யாழ். நகரில்

# கைத்தொழில், விவசாய கைப்பணிக் கண்காட்சி

வெள்ளவத்தை. ஞாயிறு

கைத்தொழில் விவசாய கைப்பணிக் கண்காட்சி ஒன்றினை 1971-ம் ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு இளந்தமிழர் முன்னேற்ற மன்றம் எண்ணியுள்ளதாயும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உற்பத்தியாளர்களை ஒன்றிணைப்பதற்கும், உற்பத்திகளைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்கும், உள்ளூர்ப் பொருட்களையே பாவிக்கவேண்டுமென்ற உணர்ச்சியினை நம்மவர்களுக்கு உருவாக்குவதற்கும் இக்கண்காட்சி உதவுமெனநம்புவதாயும் இளந்தமிழர் முன்னேற்ற மன்றம் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மகளிர் மன்றங்கள், பொதுத் தாபனங்கள் சிறுதொழில் ஸதாபனங்கள், பாடசாலைகள், கைத்தொழில் நிலையங்கள். பொது இயக்கங்கள் ஆகியவற்றினதும். பொதுமக்களினதும், குறிப்பாக மாணவ, விவசாய அன்பர்களினதும் ஒத்துழைப்பையும் பேருக்கத்தையும் இத்துறையில் நாம் பெரிதும் எதிர்பார்க்கிருேம் என்றும், இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் இயக்கங்கள் பாடசாலைகள். மன்றங்கள், பொதுத்தாபனங்கள், தனிநபர்கள் ஆகியோர் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்பாகத் தொடர்புகொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## சிறைச்சாலையில் நவராத்திரி விழா

கண்டி, ஞாயிறு

போகம்பறை சிறைச்சாலையில் 10 நாட்களும் நவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது கடைசித் தினத்திலன்று உருத்திர கும்பம் வீதிவலம் வந்து விசேஷ பூசைகள் நடைபெற்றன. உயர் அதிகாரிகள் இதை நடாத்துவதற்கு உதவியளித்தனர்.

## நெல்கொள்வனவு ஆலோசகராக நியமனம்

சுழிபுரம். ஞாயிறு

மூளாய்கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவரும், வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவு சமாஜத் தலைவரும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபருமாக விளங்கும் திரு வி. இராசசுந்தரம் நெல் கொள்வனவு ஆலோசனைக் குழுவில் ஓர் அங்கத்தவராக காணிவிவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பகடுவாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. இராசசுந்தரம் வட்டுக்கோட்டைத்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவராகவும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சபையின் ஊர்காவற்றுறைக் கிளை அங்குரார்ப்பணவிழாவில் பேசிய மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு. எஸ் செல்லையா இவ்வாறு கூறினுர். மகாசபை உப தலைவர் திரு. எம். செல்லையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. எஸ். செல்லையா மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

முந்திய அரசாங்கங்களில் எமக்கென ஒரு பிரதிநிதியின்மையால்தான் எமது கஷ்டங்கள் பெரும்பாலும் தீராமல் நாம் அல்லோலகல்லோலப்படவேண்டியேற்பட்டது இக்குறையை ஸ்ரீமாவோ அரசாங்கம் தீர்க்குமுகமாக மகாசபைத் தலைவர் திரு எம் சி சுப்பிரமணியத்தை தமது அரசாங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்துள்ளார்.

நாம் சகல சலுகைகளையும் பெற்று ஏனைய சமூகத்த

## பீகிங்கில் சோவியத் தூதுவர்

ஹாங்காங், அக் 11

கம்யூனிஸ்ட் சீனுவுக்கான சோவியத் தூதுவர் பீகிங் சென்றடைந்துள்ளார். இருநாடுகளுக்கிடையிலும் உறவுகள் முறிவுற்றபின் தூதுவர்கள் திருப்பியழைக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது மீண்டும் இருநாடுகளுக்குமிடையில் உறவுகள் சுமுகமடைந்துவருவதால் தூதுவர்கள் பரிமாறப்படவிருக்கின்றனர். சோவியத் தூதுவர் சீனுவுக்கு போய்ச் சேர்ந்துவிட்டபோதிலும் சீனு இன்னும் தனது தூதுவரை மாஸ்கோவுக்குஅனுப்புவதுபற்றி ஒன்று அறிவித்ததாகத் தெரியவில்லை.

சபை கோரியுள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

0 சைவசமயத்தைப் பேணிக்காக்க இப்போதுள்ள சூழ் நிலையில் எதிர்கால நிலைமைகளை நன்றாக சிந்தித்து புதிய அரசியல் அமைப்பு திட்டத்தில் பாதுகாப்பு சட்டங்கள் இடம் பெற வேண்டும்.

0 சிவபெருமானே முழு முதல் கடவுள் என்று வழிபடுபவர்கள் சைவர்கள். அவர்களுடைய சமயம் சைவம் இச்சொல் தற்போது காந்திசமயம், சாயிபாபாசமயம்போன்றசொல்லால் அழைக்கப்படுகிறது. ஆகையினுல் இந்துசமயம் ஒருதொகுப்புப்பெயர் ஆதலால் சைவமக்சள் முன்போல் தங்கள் சமயம் சைவம் என அழைக்க வழி வகுக்க வேண்டும்.

0 சைவமக்களின் சமய ஒழுங்குகள் கட்டுப்பாட்டு புத்தகங்கள், சமய இலக்கியங்கள் சமஸ் கிருதத்தில் உள்ள வேதசிவாகமமும் அத்துடன் இவற்றுக்கு மாறுபாடு இல்லாத மற்றும்சைவ இலக்கியங்களையும் பாதுகாக்க வேண்டும்.

0 சைவ வழிபாட்டு கிரியைகள் மற்றும் சைவகிரியைகளுக்கு தற்போது நடைபெறுவது போல உரிய பாஷை சமஸ்கிருதமும் பன்னிரு திருமுறைகள்போன்ற மற்றும் தமிழ் சமய இலக்கியங்களுமே.

0 இலங்கையின் வேத சிவாகமங்களுக்குமாருகவோ அல்லது சைவசமயத்தை பாதிக்கக்கூடிய எந்த முறையிலும் அரசு சட்டம் இயற்றல் ஆகாது. அத்துடன் சைவர்களின் சமய சுதந்திரத்தை தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் அல்லது பாதிக்கும் எவ்வித சட்டமும் அரசு இயற்றக்கூடாது,

தில் கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு இருபத்தொரு நாட்கள் விசேட பூசையும் லட்சாட்சனையும் இம்முறை முதல்முதலாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன?

இவ்வொழுங்குகளை மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதனும் இப்பகுதி அன்பர்களும் மேற்கொண்டுள்ளனர்.

## பாடசாலைகளில் நிலவும் குறைகள்

பூநகரி, ஞாயிறு

பூநகரிப் பகுதியில் உள்ள ரோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பூநகரி மகாவித்தியாலயத்திலும் உள்ள தளபாடப் பற்ருக்குறை ஆசிரியர் பற்ருக்குறைகள் பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி உறுதியளித்துள்ளார்.

## 3 நாடகங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 13ந் திகதி பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில் வசந்தகான சபாவினரின் மயானகாண்டம், பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினரின் கண்டி அரசன், அரியாலை ஐக்கிய நாடக மன்றத்தினரின் பூதத்தம்பி ஆகிய 3 நாடகங்கள் மேடையேற்றப்பட இருக்கின்றன.

## நியமனம்

கோட்டை ஞாயிறு

பிரபல வழக்குரைஞரான திரு ரி. டபிள்யு ராஜரட்னம் அஸைஸ் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் களுத்துறை சுப்ரீம்கோர்ட் விசாரணைகளின் போது இவர் தலைமைதாங்குவார்.


தீபாவளி மலிவு விற்பனை

(10-10-70 — 29-10-70)

S.R.S.

ஜவுளி மாளிகையில்

எந்த விதமான தீபாவளி ஜவுளிகளையும்
மலிவு விலைகளில் வாங்கலாம்.

எஸ். ஆர் செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட், (போன்: 296) யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உண்மை பேசல் அழகாய் எழுதுவதை ஒக்கும். பழகப்பழகவே அது கைகூடும். அது ஆசையை விடப் பழக்கத்தையே பொறுத்ததாகும். —ரஸ்கின்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 26-ந் திகதி (12-10-70)

## அரசாங்க ஊழியரின் சிங்களத் தேர்ச்சி

சிங்களத்தில் தேர்ச்சி பெற முயற்சிசெய்யாத புதிய அரசாங்க ஊழியர் (1956-ம் ஆண்டுக்குப் பின் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) அரசாங்கசேவையிலிருந்து விலகவேண்டும் என்று பொதுநிர்வாக உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இதேசமயம் சிங்களத்தில் தேர்ச்சி பெற உண்மையாக முயற்சி எடுத்து அதில் சித்தியெய்தாத ஊழியர்களுக்கும் சிங்களம் கற்க வசதியில்லாத ஊழியர்களுக்கும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு மேலும் அவகாசம் வழங்கப்படுமென்றும் அமைச்சர் உறுதியளித்திருக்கிறார்.

சிங்களத்தில் தேர்ச்சி பெறத் தவறிய அரசாங்க ஊழியருக்கு மேலும் அவகாசம் கொடுக்கப்படவேண்டுமென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் தமிழ் அரசியல் கட்சிகளும் கோரி வந்திருக்கின்றன. சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு முயற்சிசெய்தும் தேர்ச்சி பெறத் தவறியவர்களுக்கும் சிங்களம் படிக்க வசதியில்லாதவர்களுக்கு மேலும் அவகாசம் கொடுப்பதென்று அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அறிவித்திருப்பது அவரது நல்ல மனதைக் காட்டுகிறதெனப் பாராட்டலாம்.

சிங்களம் படிப்பதற்கு இதுவரைவசதிகிடைக்காதவர்களுக்கு இனி அவர் வசதி செய்து கொடுக்கவும் கூடும்.

1956-ம் ஆண்டுக்குப் பின் அரசாங்க சேவையில் சேர்ந்த புதிய அரசாங்க ஊழியர் சேவையில் சேரும்பொழுதே குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவோம் என்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டே சேவையில் சேர்ந்தவர்களாகையால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நியாயமுண்டு என்று அரசாங்கம்

டாரநாயகா கொண்டுவந்து நிறைவேற்றிய தமிழ்மொழி விசேஷ சட்டத்தை அமுல் நடத்தும்பொருட்டு 1965-ம் ஆண்டில் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான தேசிய அரசாங்கம் அதற்கென விசேஷ ஷரத்துக்களைக் கொண்டுவந்தது. இதை இன்றைய ஆளும் கட்சியினரான கூட்டணியினர் எதிர்த்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்கள்பலரும் அவர்களின் தொழிற்சங்கங்களின் கோரிக்கையின் பேரில் தொழிற்சங்க நடவடிக்கையாக தமிழ்மொழி விசேஷ ஷரத்துக்களை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனர். அரசாங்கத்தின் கொள்கைக்குமாறாக நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின்மீதுவேலைநிறுத்தம் செய்த அரசாங்க ஊழியர் சிலர் மீது அன்றைய அரசாங்கம் ஒழுங்குநடவடிக்கைஎடுத்தது. சிலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அரசாங்க ஊழியர் எந்தவிதமான அரசியல் கொள்கையைப் பின்பற்றினாலும் அரசாங்கத்தின் கொள்கையையும் திட்டங்களையும் அமுல் நடத்தக் கடமைப்பட்டுள்ளவர்கள், அதில் தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது எந்தஅரசாங்கமாக இருந்தாலும் அதன் கடமையாகும். இந்தவகையில் அந்த அரசாங்கத்தின் மீது தவறு சொல்வதற்கில்லை,

பொதுத் தேர்தல் முடிந்து கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் 1966-ம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் பங்குபற்றித் 'தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பழிவாங்கப்பட்டவர்களுக்கு 'நியாயம்' வழங்கி வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள், சம்பளப்பாக்கியுடன் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

# இந்திய அரசியல்போக்கு

உத்தரபிரதேசத்திலே ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்தமைக்காக பிரதமர் இந்திரா காந்தியையும் ஜனாதிபதி கிரியையும் அவர்களது அரசியல் விரோதிகள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்கள். பிரதமர் இந்திரா ஜனநாயகத்தைக் கொலை செய்துவிட்டதாகவும், அவர் ஆட்டிவைக்கும்படி கிரி ஆடுவதாகவும் இவ்விருவரது "சர்வாதிகார" ஆட்சியையும் ஒழிக்கவேண்டுமென்றும் பொருள்பட பழைய காங்கிரஸ், சுதந்திரா, ஜனசங்க இம்மூன்று கட்சித்தலைவர்களும் சேர்ந்து தினசரி வசைமாரி பொழிகின்றனர். இந்தியா பத்திரிகைகள் பலவும் இவ்விதமேஎழுதுகின்றன. இந்தியாவின் பட்டினிப்பிரச்னையை பலாதிகாரங்களை எப்படித்தீர்ப்பது என்பதைப்பற்றி ஆலோசித்து ஒற்றுமையாக நடவடிக்கை எடுப்பதற்குபதில் இந்திரா காந்தி செய்துவருவதுசரியா தவறா என்பதை ஆராய்வதிலேயே இந்திய அரசியல் உலகம் காலத்தை வீணாக்குகின்றது.

'சிண்டிகேட் காங்கிரஸ்' ஜனாதிபதி தேர்தல் விஷயமாகச்செய்த தீர்மானத்தை பிரதமர் இந்திரா மீறியது ஏன்? திரு சஞ்சீவரெட்டிக்குப் பதில் திரு. வி. வி. கிரியை, பிரதமர் இந்திரா ஆதரித்ததற்கு தனிப்பட்டவர் மீதுள்ள விருப்பு வெறுப்புகாரணமல்லவென்றும், சோஷலிச இலட்சியக் கொள்கையை தீவிரமாகப் பின்பற்றவேண்டுமென்பதே என்றும், அமைச்சர் திரு சவான் தமிழகம்வந்த போதுவிளக்கினார். ஒரு சில பழைய தலைவர்கள் இருந்து கொண்டு தங்கள் இஷ்டப்படி காங்கிரஸைமட்டுமன்றி பிரதமர் இந்திராவையும் ஆட்டிவைக்க முற்பட்டனர். இதற்கு பிரதமர் இந்திரா உடன்படாமல் திரு கிரியை ஜனாதிபதி பதவித்தேர்தலில் ஆதரித்து வெற்றியும் கண்டார். பொதுமக்களும் திருமதி இந்திராவின் பக்

**பராசரன்**

கமே தீர்ப்பளித்தனர். ஜனாதிபதியின் தேர்தலில் மட்டுமல்ல, சென்ற மாதம் கேரளத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும். புதிய காங்கிரஸுக்கே அதிகமான ஸ்தானங்கள் கிடைத்துள்ளன 'பலாத்கார இயக்கத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்த கேரளத்தை பிரதமர் இந்திரா இத்தேர்தல் மூலம் திருப்பிவிட்டார். இது அவருக்குக்கிடைத்த மற்றொரு பெரிய வெற்றி.

இதேசமயத்தில் பிரதமர் இந்திராவின் அரசியல் விரோதிகள் எல்லாரும் கூட்டுச்சேர்ந்து கேரள சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்தார்கள். பழைய (சிண்டிகேட்)காங்கிரஸ், சுதந்திரா ஜனசங் இம் மூன்று கட்சிக்கும் ஒரு ஸ்தானம்கூடகிடைக்கமுடியவில்லை, கேரளப் பொதுமக்கள் கற்பித்த பாடத்தை மேற்குறித்த மூன்று கட்சிகளும் உணர்ந்து. பொதுமக்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றுவரும் பிரதமர் இந்திராவை ஆதரிக்காவிடினும் எதிர்க்காமலாவது இருக்கலாம். ஆனால் இந்திரா காந்தியின் ஆட்சியை எவ்விதம் கவிழ்க்கலாம் என்பதிலேயே துரதிருஷ்டவசமாக, அம்மூன்று கட்சிகளின் தலைவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்திலே புதிய காங்கிரஸே மற்றக் கட்சிகளைவிட அதிக ஸ்தானங்களைப் பெற்றுள்ளது மந்திரிசபையை அமைக்க, மற்றக் கட்சிகளை விடப் புதிய காங்கிரஸுக்கே அதிகஉரிமையுண்டு. பெரும்பான்மைப் பலம் அதற்கு இல்லாவிட்டாலும் மற்றவர்களைவிடப் பொதுமக்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றவர்கள் என்ற முறையில் இவ்விஷயத்தில் அவர்கள் கருத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கவேண்டும். அவர்களது ஆதரவை நம்பித்தான் அங்கு திரு சரண்சிங் மந்திரிசபை அமைத்தது. புதிய காங்கிரசின் ஆதரவை இழந்த நிலையில், கவர்னர் மந்திரிசபையைக் கலைத்துப் புதிய ஸ்திரமான ஓர் ஆட்சியை ஏற்படுத்த, தற்காலிகமாக ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தியதில் என்ன தவறு? மேலும் அரசியல் சட்டப்படி பிரதமர் கூறும் யோசனையையே ஜனாதிபதி ஒப்புக்கொள்ள வேண்டியவர். இந்நிலையில் பிரதமரின் தலையாட்டிப் பொம்மையாக அவர் இருப்பதாகக் கூறுவது எப்படி நியாயம்?

இந்தியாவில் அரசியல் காற்று, பிரதமர் இந்திராவின் பக்கம் தான் வீசுகின்றது. உத்தரப் பிரதேசத்தில் புதிய தேர்தல் நடப்பின், பிரதமரின் கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைப்பதற்கு அதிக வாய்ப்புண்டு. பொதுமக்களுக்குப் பிரதமர் இந்திராவிடம் நம்பிக்கை அதிகரித்துவருவதைப் பார்க்கின்றோம். கேரளத்தில் பெற்ற பெருந்தோல்வியால் பிரதமரின் அரசியல் எதிரிகள் எவ்வித பாடமும் இன்னும் கற்றதாகத் தெரியவில்லை. இந்திராவைப் பிரதமர் பதவியிலிருந்து சொந்த மாற்சரியங்களால் நீக்கவேண்டும் என்பதை மறந்து, நாட்டின் முக்கிய பிரச்னைகளைத் தீர்க்க அவருடன் கூடுமானவரை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துழைப்பின் அது அவர்களுக்கும், நாட்டுக்கும் எவ்வளவோ நல்லது. அதுவே அரசியல் ஞானமுமாகும்- அப்படியின்றி குறுகிய அரசியல் நோக்கமும், பதவிப் போட்டியும் கொண்டு காரியம் செய்துவதாயின், அது பலவிதங்களிலும் துரதிருஷ்டமாகும். நாட்டு விடுதலைக்காக ஒத்துழைத்துத் தியாகம் செய்தவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக விட்டுக்கொடுத்து ஒத்துழைக்க ஏன் முடியாது?

# சுதந்திரம் பெற்ற சுந்தரத் தீவுகள்

இயற்கை அழகு கொழிக்கும் சுந்தர தீவுகளாக வர்ணிக்கப்படும் பிஜி கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழிருந்து அக்டோபர் 10ம்திகதி தேசிய சுதந்திரம் பெற்றுக் கொண்டது. கோலாகலமாக நடைபெற்ற பிஜியின் சுதந்திர வைபவத்தில் கலந்து கொண்ட இளவரசர் சார்ல்ஸ் சுதந்திர பிரகடனத்தைக் கொண்ட அரசியலமைப்புப் பத்திரத்தை பிஜியின் பிரதம மந்திரி சேர் கமிஸி மாராவிடம் கையளித்தார். தேசிய விடுதலை பெற்றுள்ள பிஜி பிரிட்டனுடன் முற்றாக உறவைத் துண்டித்துக் கொள்ளாது.

தீவுகளின் மொத்த ஜனத்தொகை 519,000 எனக் கணிக்கப்பட்டது. சுதேசிய பிஜி மக்கள், இந்திய வம்சாவழியினர், ஐரோப்பிய, சீன வம்சாவழி மக்களாக பல இனமக்கள் இங்கு வசிக்கின்றனர். இவற்றில் 256, 000 பேர் அதாவது 50 விகிதத்தினர் இந்திய வம்சாவழியினர். 215 000 பேர் பிஜி சுதேசிகள் (41விகிதம்). எஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா, கனடா உட்பட வெளிநாடுகளுக்குஏற்றுமதியாகின்றன. சீனி உற்பத்தியே நாட்டிற்குப் பெரும் வருமானத்தைத் தேடித்தரும் பிரதான ஏற்றுமதிப் பொருளாக விளங்குகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய அரசியலமைப்பு

சுதந்திரமடையும் பிஜி

மந்திரிகள் அங்கம் வகிப்பார்கள். பிரதமமந்திரியின் ஆலோசனையின் பேரில் மகாதேசாதிபதி அமைச்சர்களை நியமிப்பார்.

### தேசிய அபிவிருத்தி

1966-ம் ஆண்டு பிஜியில் அமுலுக்கு வந்த ஐந்தாண்டுத்திட்டம் இவ்வருடத்துடன் முடிவடைகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயம், கல்வி, சுகாதாரம், நிலஅபி

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# மொழிப் பிரச்னைக்கு ஒரு யோசனை

தற்பொழுது நாட்டில்நிலவும் பிரச்னைகளில் மக்கள் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது மொழிப் பிரச்னையாகும். இலங்கையில் மிகப் பழைய காலத்தில் அனுஷ்டிக்கும் கொள்கையை அனுசரித்தால் இம் மொழிப் பிரச்னைக்கு தீர்வுகண்டு விடலாம். போர்த்துக்கேயர் காலத்திலும் இக் கொள்கை அனுசரிக்கப்பட்டது. அதாவது பிரிவேனாக்களில் தமிழ் மொழியைக் கற்பித்தலாகும்.

இவ்வாறு நான் கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள. இலங்கையில் மத்தியகாலத்து . கலாச்சாரம் என்னும் நூலை எழுதிய கெய்கர் என்பவர் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் பேசப்படும் பல்வேறுமொழிகள் மிகவும் பாராட்டப்பட்டவையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பராக்கிரமபாகுவினால்அவரதுமாளிகையில் வளர்க்கப்பட்ட உயர் குடும்பத்தைச் சேர்ந்த பல பிள்ளைகளுக்கு அன்னியமொழிகள் போதிக்கப்பட்டன. சோழ நாட்டைச் சேர்ந்ததேரோ ஒருவர் நான்காவது பராக்கிரமபாகுவினது அரசசபையில் 14-ம் நூற்றாண்டுகல்வி போதித்தவர். இந்த ஆசிரியர் அவரது பலமொழிப் பாண்டித்தியத்தாலும் தத்துவ அறிவாலும் அவரது தத்துவ நூல்களாலும் பெரும்புகளைப் பெற்றவர். நான - பாஷை - வியாரதா 90.80) (புராதன இலங்கையில் கற்கவேண்டும் என இருந்த நான்கு பாஷைகளாவன: சமஸ்கிருதம், பாளி சிங்களம், தமிழ்),

டீ குவாரொஸ் என்பவரும் தனது நூலொன்றில் Conguest of Ceylon, P P 114 115) இலங்கையில் தமிழ் மொழியின் போதனை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தென் இந்திய மொழிகள் இலங்கையில் மட்டுமன்றித் தென் கிழக்காசியா முழுவதிலும் பாராட்டுப்பெற்றதோடு போதிக்கவும்பட்டது. யாவாவிலிருந்து அரச குடும்பத்துப் பிள்ளைகள் தமிழைக் கற்பதற்குத் தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். (Jrasgb, 1885, P 204)

இன்றும் கூட சிங்கப்பூர் மலாயா ஆகிய இடங்களில் இன்றைய சூழ்நிலையில்

தத்துவத்தின் அடிப்படையாக விளங்கிய கமிட்டி அமைப்பு முறையையும் சேர்த்துக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இதன் ஜனநாயகத் தகுதிகளின் காரணமாக நாட்டு மக்களுக்கு தேவையான நன்மைகளை சரியாகவும் ஸ்திரமாகவும் செய்து கொடுப்பதற்கான பண்டாரநாயக்கா திட்டங்களை செயற்படுத்துவதற்கு கமிட்டி முறையே பொருத்தமுடையது.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு.

0 0 0

## ஆசிரியர் தீர்மானம் இதுதான்

27,9 70 ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' இதழின் கடைசிப் பக்கத்தில் 'இவர்களை இடம்மாற்றவும்' என்ற தலையங்கத்துடன் வெளிவந்த செய்தி எமது கிளைத் தீர்மானத்திற்கு மாறாக உள்ளது.

ஒரே பாடசாலையில் தொடர்ந்து நீண்டகாலமாகக் கடமையாற்றும் எமது சமூக ஆசிரியர்களை எமது சமூக மாணவர்கள்படிக்கும் ஏனைய பாடசாலைகளுக்கு குறைந்தது ஒவ்வொருவரையாவது மாற்றம் செய்ய வேண்டும். இதனால் எமது சமூக மாணவர்கள் பயன் பெறுவதோடு, சமூகப் பிரச்னைகளுக்கும் ஓரளவு தீர்வு காணமுடியும் என்ற தீர்மானமே அ இ சி த மகா சபையின் வடமராட்சிக் கிளைப் பொதுநிர்வாக சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதென்பதைத் தெரியத் தருகின்றேன்.

ஆ. வடிவேலு
வடமராட்சிக் கிளைக் காரியதரிசி

— —

## மீண்டும் பஸ் சேவை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு-நீர்கொழும்பு பஸ் சேவை மீண்டும் முல்லைத்தீவு இ போ ச டிப்போவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பஸ் சேவைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு மேலதிக சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் பிரயாணிகட்கு தற்போது

பிட்ட கால எல்லைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறு வோம் என்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டே சேவை யில் சேர்ந்தவர்களாகை யால் அவர்கள் மீது நட வடிக்கை எடுப்பதற்கு நியா முண்டு என்று அரசாங்கம் வாதாடலாம். அதில் அர்த்த முமிருக்கிறது.

இதேசமயம் சிங்களம் படிக்காமலும் சிங்களத்தில் தேர்ச்சிபெற முயற்சிக்காத வர்களும் காரணம் சொல் வதற்கு இடமில்லாமலில்லை.

சிங்களமும் தமிழும் இந்நாட்டின் தேசிய மொழி களாகவும் உத்தியோக மொழிகளாகவும் இருந்து வந்த நிலையை 1956-ம் ஆண்டில் மாற்றி சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டதி லிருந்து தான் சிங்களம் படிப்பதை தமிழ்மக்கள் நிறுத்தினர். இது வெறும் மொழிப் பிரச்னையாகக் கருதப்பட வில்லை தமிழர் இதைத் தன்மானப் பிரச்னையாகக் கருதினர். இந்த நிலையை உணர்ந்துகொண்ட காலஞ் சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டார நாயகா சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்படுவ தற்கு முன் அரசாங்க சேவையில்சேர்ந்த அரசாங்க ஊழியர் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்களென உறுதியளித்திருந்தார்.

'சிங்களம் மட்டும்' என் பதைத் தமிழ்மக்கள் ஏற் றுக்கொள்ளவில்லையென் பதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்பதையும் உணர்ந்துகொண்ட அவர் 1958-ம் ஆண்டில் 'நியாய மான தமிழ்மொழி உபயோ கம்' என்று சொல்லி தமிழ் மொழி சட்டத்தையும் கொண்டுவந்து நிறை வேற்றினர்.

தமிழ் மொழிக்கும் இந்த நாட்டில் அரசாங்க நிர்வா கத்தில் இடம் இருக்கிற தென்பதால்தான் அவர் இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்தார். எனவே தமிழ் அரசாங்க ஊழியரும் அர சாங்க ஊழியர் தமிழ் தெரிந் திருக்கவேண்டியதும் அவ சியமாகின்றது. இதனால் தான் அவரது ஆட்சியின் பின் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது அர சாங்க ஊழியர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருக்க வேண் டும் என்ற கொள்கையை யும் சில கட்சிகள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட்டிருந்தன.

1958-ம் ஆண்டில் காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்

பற்றித் 'தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பழிவாங்கப்பட்டவர்களு க்கு 'நியாயம்' வழங்கி வேலைநீக்கம் செய்யப்பட் டவர்கள், சம்பளப்பாக்கி யுடன் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். தண்டனைகள் நீக்கப்பட் டுள்ளன. அரசாங்கம் கொண்டுவந்த ஒரு திட் டத்தை அல்லது சட் டத்தை அது நியாயமற் றவையென்று கருதி அத ற்கு எதிர்ப்புத் தெரிவித்த போது அதற்காக ஒத்து ழைத்தவர்கள் தண்டிக் கப்பட்டால் மீண்டும் ஆட்சியிலமரச் சந்தர்ப் பம் கிடைத்ததும் தங்க ளுடன் ஒத்துழைத்தவர் களைப் காப்பாற்றி 'நியா யம்' வழங்குவதைத் தவ றென்று சொல்ல முடி யுமா?

இதேசமயம் சிங்களம் படிக்க வேண்டாமென்று தமிழ்க்கட்சிகள் கூறியது அந்தக் கட்சிகளைப் பொறு த்தவரையில் நியாயமான அரசியல் நடவடிக்கை அல்லவென்றும் புதிய தமிழ் அரசாங்க ஊழிய ரையும் சிங்களத் தேர்ச் சிக்காகச் சிங்களம்படிக்க வேண்டாமென்று அர சாங்க எழுதுவினைஞர் சங் கம் தடுத்ததைத் தொழிற் சங்க நடவடிக்கை அல்ல வென்றும் சொல்லமுடி யுமா?

எனவே சிங்களத்தில் தேர்ச்சிபெற எத்தனிக்கா தவர்களையும் அரசியல் தொழிற்சங்க நடவடிக் கைகளுக்காக மன்னிப் பளித்து அவர்களுக்கும் சிங்களத்தில்தேர்ச்சிபெற அவகாசம் அளிப்பதே நியாயமாகும்.

மொழிப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணும்வரை இவ்வித அவகாசம் அளிப்பதுதான் நாட்டில் நல்லெண்ண மும் நட்புறவும் வளர வழிவகுக்கும்.

## நல்லூரில் விற்பனவுப் பகுதி அவசியம்

யாழ்ப்பாணம் திங்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்திருவிழாவின்போது அரசாங்கவிற்பனை இலாகா நடத்தும் மக்கள் கடையை வருடம்பூராவும் திறந்துநட த்தும்படி நல்லூர்க் கந்தன் வழிபடுவோர் சங்கம் வட மாகாண விற்பனவு இலாகா அதிகாரியிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (குவிம)

சிவலமைப்புப் பத்திரத்தை பிஜியின் பிரதம மந்திரி சேர் கமிஸ் மாராவிடம் கையளி த்தார். தேசிய விடுதலை பெற்றுள்ள பிஜி பிரிட்ட னுடன் முற்றுக உறவைத் துண்டித்துக் கொள்ளாது. சாம்ராஜ்ய கூட்டணியில் ஓர் அங்கத்துவ நாடாக இருந்து பிரிட்டனுடன் தொடர்ந்து சினேக பூர்வ மான கூட்டுறவை வளர்த்து வர அது தீர்மானித்திருக்கி றது.

இவ்வாண்டு ஏப்ரல், மே மாதங்களில் லண்டனில் நடைபெற்ற அரசியலமை ப்பு மாநாட்டின் போது பிஜிக்குப் பூரண சுதந்திரம் வழங்குவதென பிரிட்டன் உடன்பட்டது. இந்த உடன் பாட்டை அங்கீகரித்துக் கடந்த ஜூன் 18ந் திகதி பிஜி சட்டசபை ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியது. இதேவேளை பிரி ட்டிஷ் பாராளுமன்றமும் பிஜிக்குச் சுதந்திரம் வழங் குவது சம்பந்தமான மசோதா ஒன்றை சமீபத் தில் நிறைவேற்றியது. 1874ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் திகதி பிரிட்ட னின் ஆட்சிக்குக் கீழ் வந்த பிஜி சரியாக 96ஆண்டுகளுக் குப் பின்னர் தேசிய சுதந்தி ரம் பெற்றுக் கொள்கிறது.

### நாடும் மக்களும்

தென்மேற்குப் பசுபிக் சமுத்திரத்தில் அவுஸ்திரே லியாவிற்கும் நியூஸிலாந்திற் கும்மத்தியிலுள்ளபிஜிமொத் தம் 844தீவுகளைகொண்டது இவற்றில் 100 தீவுகள்வரை யில்தான் மக்கள் நிரந்தர மாக வசித்து வருகிறார்கள். ஏனைய தீவுகள் பயிர்ச் செய் கைக்காகவும்] மீன்பிடிக்காக வும்பயன்படுத்தப்பட்டு வரு கின்றன.

இயற்கை அழகும் நிலவள மும் நிறைந்த பிஜியின் மிகப்பெரிய பிரதான தீவாக விளங்குவது விட்டி லேவு எனப்படுவது. 4,011 சதுர மைல் நிலப்பரப்பு டைய இத்தீவில் தான் பிஜி யின் தலைநகரான சூவா இருக்கிறது. அடுத்த பெரிய தீவு வனுவ லேவு என்பது. இது 2137 சதுரமைல் நிலப் பரப்பைக்கொண்டது. உயர் மலைகள், ஆறுகள், வளம் நிறைந்த சமதரைகளைக் கொண்ட இவ்விரு அழகிய தீவுகளும் ரம்மியமான இய ற்கைக் காட்சிகளுக்குப் பிர பல்யம் பெற்றவை. சிறிய தீவுகளில் பெரும்பாலா னவை வளமற்று, வரண்டு காட்சியளிக்கின்றன. மலைப் பாறைகளால் சூழப்பட்ட இச்சிறிய தீவுகள் பிரதான மாக மீன்பிடி நிலையங்களா கவே பயன்படுகின்றன.

### ஜனத்தொகை

சென்ற வருடம் செய்யப் பட்ட மதிப்பீட்டின்படி பிஜி

னர், ஐரோப்பியர், சீன வம்சாவழி மக்களாக பல இனமக்கள் இங்கு வசிக்கின் றனர். இவற்றில் 256,000 பேர் அதாவது 50 விகிதத் தினர் இந்திய வம்சாவழியி னர். 215,000 பேர் பிஜி சுதேசிகள் (41விகிதம்). எஞ் சிய 9 விகிதத்தினரில் ஐரோ ப்பியர்களும் சீன வம்சா வழியினரும் அடங்குவர்.

பிஜி சுதேசிகள் மலே சிய வம்சவழியினர். பொலி னேஷிய இனக்கலப்பும் இவ ர்களிடம் பிற்காலத்தில் ஏற் பட்டதாக சரித்திர ஆசிரி யர்கள் கூறுகிறார்கள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் னர் கரும்புத் தோட்டங்க ளில் குடியேறிய இந்திய தொழிலாளர்களின் பரம்ப ரையினரே இந்திய வம்சா வழியினராவர். இவர்கள் இப்பொழுது பிஜி நாட்டை தமது தாயகமாகக்கொண் டுள்ளனர்.

கிறீஸ்து மதமும், இந்து மதமும் பிஜியின் பிரதான மதங்களாகும். அத்துடன் ஒரு குறிப்பிடத்தக்க தொகையினர் இஸ்லாமதத் தைதழுவியுள்ளனர். ஆங்கி லம், பிஜி, ஹிந்தி ஆகிய வையே பிஜியின் பிரதான மும் மொழிகளாகும். ஆங்கி லமே நாட்டின் உத்தியோக மொழி. அத்துடன் சகல மத்தியதரப் பாடசாலைகளி லும் ஆங்கிலமே போதனு மொழியாக இருந்து வருகி றது.

### பொருளாதாரம்

பிஜி பொருளாதாரத் துறையில் துரித முன்னேற் றம்கண்டுவரும் நாடு. சீனி, தெங்குப் பொருள், தங்கம் ஆகியவற்றின் ஏற்றுமதி யில்தான் பிஜியின் பெரும் பொருளாதாரம் தங்கியிருக் கிறது. சுரங்கத் தொழில், மரஉற்பத்தி, அத்துடன்உல் லாசப் பிரயாணத்துறை ஆகியன மூலமும் நாட்டு க்கு நிறைய வருமானம் கிட்டுகிறது,

பிஜி தீவுகளில் மொத்தம் 6000,000 ஏக்கர் நிலம் விவ சாயத்திற்கு பயன்படுத்தப் படுகிறது. கரும்பும் தெங் குப் பொருட்களும்தான் பிர தான பயிர்ச் செய்கைகளா கும். அத்துடன் நெல் கொக்கோ. பழவகைகள், மரக்கறிவகைகளும் பயிர் செய்யப்படுகின்றன. சுமார் 15,000 தனிப்பட்ட விவ சாயிகள் கரும்பு பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள னர். இவர்களில் பெரும் பான்மையோர் இந்திய வம் சாவழி மக்களாவர். 1968ம் ஆண்டில் மொத்தம் 994,000 தொன் சீனி பிஜி தீவுகளில் உற்பத்தி செய் யப்பட்டது. இதில் 5 விகி தம் மட்டுமே உள்நாட்டுக் கொள்வனவிற்குப் போது மானது. 95 விகிதமான சீனி உற்பத்தி பிரிட்டன், பெரும் வருமானத்தைத் தேடித்தரும் பிரதான ஏற்று மதிப் பொருளாக விளங்கு கிறதென்பது குறிப்பிடத் தக்கது.

### புதிய அரசியலமைப்பு

சுதந்திரமடையும் பிஜி யின் புதிய அரசியலமைப் புச் சட்டத்தின் பிரகாரம் ஜனப்பிரதிநிதி கள் சபை. மேற்சபை (செனட்) ஆகி யனவற்றைக் கொண்ட பாராளுமன்றமே நாட்டின் அதிகாரபீடமாக விளங் கும். செனட்சபை-22 அங் கத்தவர்களைக் கொண்ட தாக இருக்கும். இவற்றில் எண்மர் சுதேசித் தலைவர் கள் சபையாலும், எழுவர் பிரதம மந்திரியாலும், அறு வர் எதிர்க்கட்சித் தலைவரா லும் நியமிக்கப்படுவர், ரொட்டுமாதீவு கவுன்சிலா லும் ஒருவர் நியமிக்கப்படு வார். செனட்சபைத் தலை வர் சபை அங்கத்தவரால் தெரிவு செய்யப்படுவார். செனட்சபையின் பதவிக் காலம் ஆறு வருடங்களா கும்.

சுதந்திரம் பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து தற்போதைய சட்டசபை ஜனப்பிரதிநிதிகள் சபை யாக மாற்றப்படும். புதிய அரசியலமைப்புச் சட்டத் தின் பிரகாரம் அடுத்த வரு டம் நவம்பர் மாதத்திற்கு முன்னராக பிஜியில்பொதுத் தேர்தல் நடைபெற இருக் கிறது. இத்தேர்தலில் ஜனப் பிரதிநிதிகள் சபைக்கு 52 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மந் திரி சபையில் பிரதமர், அட் டோர்னி ஜெனரல் மற்றும் நியமிப்பார்.

### தேசிய அபிவிருத்தி

1966-ம் ஆண்டு பிஜியில் அமுலுக்கு வந்த ஐந்தாண் டுத்திட்டம் இவ்வருடத்து டன் முடிவடைகிறது. இத் திட்டத்தின்கீழ் விவசாயம், கல்வி, சுகாதாரம், நிலஅபி விருத்தி போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்ற பல்வேறு துறைகளில் 4 கோடி பவுண்கள் வரை செலவளிக்கப்பட்டு குறிப் பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டிருக்கிறது, அடு த்த வருடத்திலிருந்து அடு த்த ஐந்தாண்டுத் திட் டத்தை அமுலாக்குவதற் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தில் 8 கோடி பவுண் கள்வரை செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்புதிய ஐந்தாண்டு அபி விருத்தித் திட்டம் பிஜியின் தேசிய வருமானத்தை ஆண்டுதோறும் ஆறு விகி தம் அதிகரிக்கச் செய்யு மென எதிர்பார்க்கப்படு கிறது.

— —

## கடும் பரிசோதனை

கோட்டை, ஞாயிறு

விலை உயர்ந்த இரத்தினக் கற்கள் கடத்தப்படுவதாகச் சுங்கப் பகுதியினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிர யாணிகள்மீது பரிசோதனை கள் வலுப்படுத்தப்பட்டுள் ளது.

துறைமுகத்தில் கடமை யாற்றும், சுங்கப்பகுதி உத் தியோகத்தர்களை மேலும் பல நடவடிக்கைகளை கையா ளும்படி சுங்கப் பகுதிப் பிர தம கலெக்டர் தெரிவித் துள்ளார்.

சந்தேகம் ஏற்படும் பட் சத்தில் பிரயாணிகளை பிர யாணத்தை மேற்கொள் ளும்போதே பரிசோதனை செய்வதற்கு சுங்கப்பகுதி உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது

குறிப்பாக, பாங்கொக், சிங்கப்பூர், சென்னை செல் லும் பிரயாணிகள்மீது கடும் பரிசோதனை செய்யப்படும்.

## மகாமண்டபம் அமைக்க நன்கொடை

யாழ்ப்பாணம், திங்கள்

உருத்புரபுரம் சிவாலய புனருத்தாரண சபையார் மேற்படி ஆலயத்திற்கு மகா மண்டபம் அமைப்பதற் கான முயற்சியில்ஈடுபட்டுள் ளனர். சபையின் உப தலை வர் திரு, ஆ. ச. முருகேசு தாமே ஆயிரம் ரூபா நன் கொடையளித்து நிதிசேர் ப்பு வைபவத்தை ஆரம் பித்து வைத்துள்ளனர்.

மகாமண்டப வேலையைத் துரிதமாகக் கட்டிமுடிப்ப தற்கு நிர்வாகக் குழுவொன் றும் தெரிவு செய்யப்பட் டது. திருவாளர்கள் க. சதா சிவம், எம், ஆறுமுகம், த. நல்லதம்பி. சி. கதிரவேலு, க. கணேசு, திருமதி சு. வள் ளியம்மை, திருமதி ராசா கதிரவேலு முதலியோர் இதில் அங்கம் வகிக்கின் றனர், (கு. வி. ம)

— —

## மாடுகளைச் சுடுகிறார்களாம்

எழுதுமட்டுவாழ், ஞாயிறு

பளை கறுக்காய் பகுதியில் உள்ள தென்னந்தோப்பு களில் வளரும் மாடுகளை விஷமிகள் சிலர் நாளாந்தம் சுட்டுக்கொன்று வருவதாக புகார் கூறப்படுகிறது. ஏரா ளமாக இங்கு காணப்பட்ட மாடுகள் நாளுக்குநாள் குறைந்துவருவதாக பளைப் பொலிசாரிடம் முறையிடப் பட்டுள்ளது.

குடும்பத்துப் பிள்ளைகள் தமிழைக் கற்பதற்குத் தென்னிந்தியாவுக்கு அனுப் பப்பட்டனர். (Jrasgb, 1885, P 204)

இன்றும் கூட சிங்கப்பூர் மலாயா ஆகிய இடங்களில் இன்றைய சூழ்நிலையில் ஆங்கில மொழியையும் கற்க வேண்டும் எனக் கூறவிரும்பு கிறேன் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையி லான பல்கலைக்கழக ஆணைக் குழு வெளியிட்ட கருத்து இச்சந்தர்ப்பத்தில் குறிப் பிடத்தக்கது. 'பெரிய சிறு பான்மையினருடையதாக விருந்தாலும் அது ஒரு சிறு பான்மையினரின் மொழியா கும். துரதிருஷ்டவசமாகஇம் மொழிகளோடு ஒப்பிடும் போது பிரயோசனக் குறை வுடையதாகவே இருக்கிறது வரலாறு இலக்கியம் ஆகிய துறைகளில் இது பற்றிய மொழிகள் போன்று செழிப் புடையதாகவில்லை. தமிழ் மொழியை நோக்கும்போது அது காலத்தால் முந்திய தும் புகழ்வாய்ந்த இலக்கி யங்களையுமுடையதாகவுள் ளது. எவ்வாறிருப்பினும் ஆங்கில மொழி தொடர் ந்து யாவராலும் கற்கவேண் டியதொன்றாகும், இலக்கியம் விஞ்ஞானம் தொழில் நுட் பம் முதலிய சகல துறைக ளிலும் இம்மொழி வளம் பெற்றதாகும்.

சர்ச்சில் கூறியது போன்று எதிர்காலம் கற்றவர்க ளுக்கே உரியது ஆங்கிலம் உங்களுக்கு உலக அறிவைத் தருகிறது. அத்துடன் உல கில் வேலைவாய்ப்புப் பெறு வதற்கும் வழிவகுக்கிறது.

ஜே. ஆர். சின்னத்தம்பி

0 0 0

## கமிட்டி முறை

மதிப்புக்குரிய காலஞ் சென்ற பிரதமமந்திரி திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண் டாரநாயக்கா விடுத்துச் சென்ற பல்வேறு அரசியல் யோசனைகளில் கமிட்டி அமைப்பு முறையும் ஒன்று. இதன் ஜனநாயகத் தன்மை யின் காரணமாகவும் இலங் கைக்கு அது பொருத்தமாக விருப்பதாலும் இன்று நாட் டில் நிலவும் அரசியல் சூழ் நிலைகளுக்குப் பொருந்துவ தாலும் 'கபினட்' ஆட்சி முறைக்குப்பதிலாக கமிட்டி முறையை அவர் சிபாரிசு செய்தார். புதிய அரசியல் திட்டத்தை அமைக்கும் போது காலஞ்சென்ற தலைவ ரின் யோசனைகளை அரசியல் நிர்ணயசபை உறுப்பினர் கள் கருத்தில் கொள்வார்க ளென்று நம்பப்படுகின்றது.

திரு பண்டாரநாயக்கா வின் கொள்கைகளையும் கருத்துக்களையும் பற்றி நிற் பதாயின் அவரது அரசியல்

லைத்தீவு இ. போ. ச. டிப்போ வினால் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. தற்போது பஸ் சேவை களில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு மேலதிக சேவைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதனால் பிர யாணிகட்கு தற்போது கஷ்டமிருக்காது என முல் லைத்தீவு இ. போ. ச. முகாமையாளர் திரு சொக்க லிங்கம் தெரிவித்தார்.

— —

## இசையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பா ணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம் கோண்டாவில் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அதன் செயலாளர் தெரிவிக்கிறார்.

....

## பாம்பு தீண்டி மரணம்

மாவிட்டபுரம், ஞாயிறு

புகையிலைப் பாட்டத்தில் இருந்த நாகபாம்பு தீண்டி யதால் ஒரு பெண் மரண மானார் எனக் கூறப்படு கிறது. அளவெட்டி தெற் கில் இது நடைபெற்றது.

அளவெட்டி தெற்கு காணியாவத்தையைச் சேர் ந்த சி. இராசரத்தினம் என் பவரின் மனைவி இராசம் மாவே இவ்விதம் மரண மானவராவார். பல வைத் தியர்களிடம் சிகிச்சை பெற்றபொழுதிலும் அவ ரைக் குணப்படுத்தமுடிய வில்லையாம்.


எங்கள் கிராமம் — 3

அரியாலை

த. இந்திரலிங்கம் எழுதுகிறார்

உலகைப்பற்றி அறியு முன்னர் ஊரைப்பற்றி அறியுங்கள்.

இதற்கு 'எங்கள் கிராமம்' என்ற தொடர் அம்சம் வாய்ப்பளிக்கிறது

14-10-70

ஈழநாடு வாரமலர்

உங்களுக்கு வழிகாட்டும்


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org